The Good Pastor

நல்ல ஆயன்

OFFICE OF ... 6-DEC 1920 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சோராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. | டிசம்பர் 1920. | இலக்கம் 12.

THE NATIVITY OF OUR LORD.
கர்த்தர் பிறந்த திருநாள்.

அநேக வருஷங்களுக்குமுன் தானியேல் தீர்க்கதரிசி தேவ அறிக்கையால் மனுக்குலத்துக்கு இரட்சணியத்தைக்கொண்டுவர இருக்கும் உலக இரட்சகருடைய வருகையை அறிவித்திருந்தாரென்று வேதாகமம் சாட்சி கூறுகிறது. செசார் அகஸ்தஸ் என்னும் இராயன் உரோமை இராச்சியங்களை அரசாண்டுவருகையில், தேசமெங்கும் சண்டை சச்சரவு குழப்பமின்றி சமாதானங் குடிகொண்டிருந்தது. தன் தேசத்திலுள்ள ஜனத்தொகையை அறியும்படி அகஸ்தஸ் இராயன் உரோமைச்செங்கோலுக்குஉட்பட்டிருந்த பிரஜைகளின் கணக்கை யெடுக்கும்படி உத்திரவு அனுப்பியிருந்தான். கன்னிமரியாயும், சூசையப்பரும் தாங்கள் பிறந்த ஊராகிய பெத்லேம் ஊருக்குப் புறப்பட்டார்கள். அந்த ஊரில் தங்குவதற்கு இல்லிடம் அகப்படாததினால் திருக்குடும்பமானது அவ்வூருக்கு அருகாமையிலிருந்த ஒருமலைக்கெபியில் தங்கும்படி நேரிட்டது. அன்றிரவு நடுச்சாமநேரத்தில் கன்னிமரியாயும் சூசையப்பரும் ஜெபத்தியானத்திலிருக்கும்போது, சூரியப்பிரகாசம் பளிங்கினை உடைக்காமல் அதை ஊடுருவுமாப்போல, திருக்கன்னிகை உதரத்தில் அற்புதமா யிறங்கியிருந்த சுதனாகிய சர்வேசுரன் மாசற்ற கன்னிகையின் கன்னிமுத்திரிகைக்குப் பழுதுவருத்தாமல், குழந்தைவடிவாய் அவள் கரங்களில் இறங்கினார். உடனேதேவமாதா அக்குழந்தை மெய்யான தேவனும் மனிதனுமென்று விஸ்வசித்து, அவரை ஆராதித்து, முத்தமிட்டு, வைக்கோவில் கிடத்தி முழங்காலிலிருந்து தியான யோகத்தில் மூழ்கினாள். சூசைமாமுனிவரும் குகையில் காணப்பட்ட அற்புத பிரகாசத்தைக்கண்டு, வைக்கோலில் கிடத்தப்பட்டிருக்குந் திருக்குழந்தையைஆராதித்து, அங்கு உண்டான பரம இரகசியத்தை நினைத்துப் பரவசங்கொண்டார். அக்கணமே தேவதூதர் மோட்சத்தினின்றிறங்கி, தயாள சிஷ்டிகரை ஆராதித்து, தேவபாடல்களைப் பாடினார்கள். சற்று தொலையில் ஆடுமாடுகளைக் காவல்செய்துகொண்டிருந்த இடையருக்கு ஒரு சம்மனசானவர் மகாப் பிரகாசத்துடன் காணப்பட்டு, உங்களுக்கு ஒருசுபசெய்தியை அறிவிக்க வந்தேன். அதென்னவெனில், வெகு காலமாக உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உலக இரட்சகர் இதோ பிறந்திருக்கிறார். அவர் கந்தைத்துணிகளால்

பொதியப்பட்டிருப்பதைக் காண்பீர்களென்றார். இதைக்கேட்ட இடையர் அச்சபயத்துடன் குகைக்குட் சென்றபோது, சம்மனசு சொன்னதுபோல திருக்குழந்தையைக் கண்டு, அவரைச் சாஷ்டாங்கமாக ஆராதித்தார்கள். மேலும் குளிரால் நடுங்கும் திருப்பாலகனுக்கு ஒரு எருதும் கழுதையும் தங்கள் ஆவியால் குளிரைப் போக்கிக்கொண்டிருந்தன.

கர்த்தர் பிறந்த திருவிழாவன்று நாம் அனைவோரும் அந்தப் பெருநாளை மகா சந்தோஷ மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோமென்பதற்குச் சந்தேகமில்லை. அன்று நமது ஆத்துமத்தைப் பாவ சங்கீர்த்தனத்தால் சுத்திசெய்து நற்கருணைமூலமாய் அவருக்கு நமது ஆத்துமத்தில் நல்வாவு கொடுப்போம். ஜெபதபம் தாழ்ச்சி பொறுமை முதலிய நற்கிரிகைகளை ஏழை இடையரைப்போல அவருக்குக் காணிக்கையாக சமர்ப்பிப்போம். தேவ தாயாரையும் அர்ச். சூசையப்பரையுங் கண்டுபாவித்து, ஞானவிதமாக அவருடைய பொற்பாதங்களில்வீழ்ந்து, அவரை ஆராதிப்போம். பூசை முடிந்தபின் பக்கத்துப் பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மாட்டுக்கொட்டிலை சந்தித்து, திருக்குழந்தையின் ஸ்ரீபாதங்களை முத்திசெய்து, இரண்டு காசை உண்டிப் பெட்டியில் போடுவோம். இந்தநாளில் செய்யவேண்டிய வேலை இதோடு முடிந்ததா? முடியவில்லை. இப்போது சொல்லப்பட்ட காரியங்களைச் செய்தபின் இன்னொரு முக்கியமான காரியமுண்டு. அது யாதெனில், நாம் மாட்டுக்கொட்டிலைச் சந்தித்தபின் அங்கு சற்று நேரம் நின்று சில யோசனைகளைச் செய்ய வேண்டும். நன்றாய் ஜோடித்திருக்கும் மாட்டுக்கொட்டிலை உற்றுப் பாருங்கள். அங்கு படுத்திருக்கும் திருப்பாலனையும், தேவதாயாரையும், அர்ச். சூசையப்பரையும், இடையரையும், ஆடுமாடு கழுதை முதலியவைகளையும் பார்த்தபின் சிற்சில யோசனைகளைச் செய்வோம். வைக்கோலில் கிடத்தப்பட்டிருக்குங் குழந்தை யார்? இவர்தான் தமதிரித்துவத்தின் இரண்டாமாள். இவர்தான் நித்திய வார்த்தையாகி, மாமிசமாகச் செய்யப்பட்டவர். இவர்தான் பரலோக பூலோகத்தை ஒரேவார்த்தையாலுண்டாக்கின சர்வேசுரன். இவர்தான் விருட்சம், சமுத்திரம், மலை, ஆறு, குளம் முதலிய சகலத்தையுமுண்டாக்கின கடவுள். இவர்தான் பொன், வெள்ளி, முத்து, மாணிக்கமுதலிய விலையுயர்ந்த கற்களை விளையச்செய்கிற கர்த்தா. இவர்தான் புஷ்பங்களுக்கு வாசனையையும் அழகையும், பறவைகளுக்கு நேர்த்தியான குரலையும், மனிதருக்குப் புத்தி சாமர்த்தியத்தையுங் கொடுக்கும் தேவன். இப்பேர்ப்பட்டவர் ஒரு சிறு குழந்தையாய் மாட்டுக்கொட்டிலில் பிறப்பதன் காரணமேது? இவர் மாட்டுத்தொழுவத்தை மாளிகையாகவும், முன்னிட்டியை சிறந்த மஞ்சமாகவும், கந்தைத்துணியை பீதாம்பரமாகவும், வைக்கோலை மெத்தையாகவும் கைக்கொள்வதற்குக் காரணமேது? ஒரு ஏழைக் கன்னிகையைத் தமது தாயாராகவும், ஒரு தச்சனைத் தமது கைத்தாதையாகவும் தெரிந்துகொள்வதற்குக் காரணமேது? மகிமைப்பிரதாபனாகிய கர்த்தர் தமது குளிரைப்போக்க நீச மிருகங்களையும், தமக்குத் துணைவர்களாக மௌடீகர்களும் ஏழைகளும், நாகரிகமற்றவர்களுமான இடையர்களையுந் தெரிந்துகொள்வானேன்? ஏன் இப்படிச் செய்தாரென்று பலமுறை இந்த வினாவை வினவுவோம். இந்த வினாக்களுக்கு அத்திருக்குழந்தையே மறுமொழி கூறுவதைக் கேட்போமாக. உங்களுக்காகவே, என்பிரிய பிள்ளைகளே, உங்களுக்காகவே இப்பேர்ப்பட்ட கஷ்ட நிர்ப்பந்தங்களையும், தரித்திர வறுமையையும், துன்பதுரிதங்களையும் உங்களுக்காகவே அனுபவிக்கச் சித்தமானோம்; நமக்கு யாதொன்றுங் குறையில்லை. பரலோகமும் பூலோகமும் நமது சித்தத்தாலுண்டாயின. சம்மனசுக்களும் மனிதர்களும் நமது சித்தத்தாலுண்டாயினர். பரலோகமும் பூலோகமும் அதிலுள்ள சமஸ்த வஸ்துகளுமின்றியே நாம் சகல மகிமை பாக்கியமுடைத்தானவராயிருக்கிறோம். உங்கள்பேரில் நமக்குள்ள கரைகடந்த சிநேகத்தினிமித்தம் மனுஷவேஷம் எடுத்து, இப்பேர்ப்பட்ட துன்பதுரிதம் வறுமை சிறுமைக்கு என் உள்ளானோம்? நீங்கள் நம்மை அதிகமதிகமாக சிநேகிக்கும்பொருட்டே. உங்கள் தேவனும் சிஷ்டிகரும் இரட்சகருமான நாம் இவ்வளவாகத் தாழ்ந்து கஷ்டசங்கடங்களை அனுபவித்திருக்க, உங்களுக்கு நாம் அனுப்பும், வியாதி, தரித்திரம் துன்பதுரிதங்களைப் பற்றி நீங்கள் முறையிடுவது ஞாயமோ? இவ்வுலக நன்மைகளின்மட்டில் மிதமிஞ்சின பற்றுதல் வையாதேயுங்கள். நீங்கள் தரித்திரத்தால் வருந்தும்போது மாட்டுக்கொட்

டிலில் கிடக்கும் நம்மைப் பாருங்கள், துன்ப துரிதத்தால், வியாதி நோவால் கஷ்டப்படும்போது மாட்டுக்கொட்டிலைப்பற்றி நினைவு கூருங்கள், மற்றவர்களால் நீங்கள் நிந்திக்கப்படும்போது மாட்டுக்கொட்டிலைத் தியானியுங்கள். தேவாதிதேவனாகிய நாம் மாட்டுக்கொட்டிலில் படிப்பிக்கும் சிறந்த புத்திகளைக் கவனமாய்க்கேட்டு, ஒழுகுவீர்களாகில் நமக்கு உகந்த பிள்ளைகளாகி மோட்ச பேரின்பத்தைச் சுகிப்பீர்கள். மாட்டுக்கொட்டிலில் நம்மைப் பின்சென்ற நமது கன்னித்தாயாரையும், சூசைமாமுனிவரையுங் கண்டுபாவியுங்கள். மாட்டுக்கொட்டிலில் நிற்கும் ஏழைகளும் குடிகளுமான இந்த இடையரையும் பாருங்கள், அவர்களுக்கு உண்டாயிருந்த விசுவாசமும் தேவ சிநேகமும் உங்களுக்கு உண்டாகும்படி பிரயாசைப்படுங்கள் என்று திருக்குழந்தையானவர் கூறும் மதுரமான இப்பிரசங்கத்தைக்கேட்டு அவ்வாறு நடப்போமாக. நமக்குச் சர்வேசுரன் தரித்திரம், வியாதி முதலிய துன்பங்களைக் கொடுத்திருந்தால், அவைகளைப் பொறுமையுடன் சகிக்கும்படியான வரத்தை மாட்டுக்கொட்டிலில் கிடக்கும் கர்த்தரிடம் மன்றாடுவோமாக. நமக்கு உலக நன்மைகள், பேர், பெருமை, சவுக்கியம், சாமர்த்தியமிருந்தால், அவைகள் எப்படி நல்ல பிரயோசனப்படச் செய்ய வேண்டுமென்று மாட்டுக்கொட்டிலில் கிடக்குந் தேவபாலகனைப் பிரார்த்திப்போமாக!

நாம் இந்த மகாநாளில், இப்பேர்ப்பட்ட நல்ல யோசனைகளைச் செய்வோமாகில் ஏராளமான ஞான நன்மைகளை அடைவோமென்பது நிச்சயம்.

உனக்கு நேரிடும் கஸ்தி விரோத மனக்கிலேச முதலிய தொந்தரவுகளில் அமிர்தகுணங் கொண்டு அடக்கமாய்ப் பேசி சாந்தகுணத்தைக் காண்பித்து மாடப்புருவைப்போலிருப்பாயாக.

வியாதிக்காரர்களைச் சந்தித்து விசேஷமாய் எளியவர்கள் வியாதியாயிருக்கையில் அவர்களுக்கு ஒத்தாசைபண்ணுவாயாக.

நீ முழுமையும் அர்ச்சிக்கப்படும்படியாய் வருந் துன்பங்களையெல்லாம் பொறுமையோடே அநுபவித்து எல்லாத்திலும் சுவாமியினுடைய சித்தத்துக்கு ஒத்திருப்பாயாக.

• சுவாமி தன்னிலேதானே எண்ணிறந்த வகையாய்ப் பாக்கியமுள்ளவராயிருக்கிறதைக் கண்டு களிகூருவாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XIX
லீலிப்புஷ்பம்.

"முட்களுக்குள் உள்ள லீலிப்புஷ்பம்" (உந்நதாகமம். II. 2).

லீலியானது அழகுள்ள ஓர் செடி. தோட்டங்களுக்கோர் அலங்காரம். புஷ்ப வகையில் முதன்மையானவைகளில்ஒன்றும். அதைப் பார்க்கையில் நமக்கு ஆச்சரியமுண்டாகிறது. அதின் மணமோ மதுரமானது. அதின் வெண்மை நிறம் மற்றெந்தப் புஷ்பத்திற்குமில்லை. அசுத்தப்படாது தன்னைக் காப்பாற்ற எண்ணுவதுபோல் செடியினின்று தண்டிட்டுமேல் எழும்பி அதில் வீற்றிருக்கிறது புஷ்பம். அம் மலரில் ஆறு இதழ்கள் உள்ளன. அவைகள் ஒன்றுகூடி கிண்ணம்போல் தோன்றும். இத் தூய்மையான பாத்திரத்தினுள் ஆறு பொன்னிற மணிகள் துலங்கும்.

சாதாரணமாக லீலிப்புஷ்பம் கற்புக்கும், கன்னிமைக்கும் உவமானமாக எண்ணப்படுகிறது. இப்புண்ணியங்களில் சிறந்த அர்ச்சிய சிஷ்டவர்கள் கையில் இப்புஷ்பந் தோன்றும். அதற்கு அர்ச். கொன்சாகா ஞானப்பிரகாசியார் ஓர் சான்று. மரியாய் சிருஷ்டிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் பரிசுத்தமானவள். அவள் இருதயம் பாவ மாசேயின்றிச் சுத்தமாயிருந்தது. ஆகவே முட்களுக்குள் லீலி முளைத்ததுபோல ஆதாமின் குமாரத்திகட்குள் மரியாயிருந்தாள் எனப்படுவது ஆச்சரியத்திற்குரியதன்று. "முட்களுக்குள் தனது கற்பெனும் வெண்மையும், கன்னிமையெனும் பிரகாசமுமுள்ள லீலி மரியாய்" என அர்ச். தமசின் அருளப்பர் பகர்கின்றார்.

1. லீலிப்புஷ்பத்தினழகுந் தூய வெண்மையும் ஆச்சரியத்திற்குரியதே. வேதாகம வசனத்தில் முட்களுக்குளுள்ள லீலி என்றிருக்கிறது. ஆகவே, லீலியை முட்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அதின் சிரேஷ்டம் நன்கு விளங்கும். முட்

கள் கறுநிறமுள்ளவை. லீலிப்புஷ்பம் கறை யில்லா வெள்ளை. முட்செடியினிடத்து மணங் கிடையாது. லீலியினிடத்து பரிமளமுண்டு. முட்செடி அருவருப்பையளிக்கும். லீலி மனத் திற்கு ரம்மிய மீயும். கன்னிமரியாயின் விசேஷ வரங்களும், புண்யக்கிரிகைகளும் தம்மிலே ஆச் சரியத்திற்குரியனவாம். முட்களுள் லீலிபோல் ஆதாமின் மக்களுள் மரியாயிருக்கின்றனள். அவர்களோடு ஒப்பிட்டுப்பார்ப்பின் அவள் அதி கமாய்ச் சிறந்து விளங்குவாள். தேவன் ஆதாமை நோக்கி :—“பூமி உன்னிமித்தஞ் சபிக்கப்பட் டிருக்கும். அது முட்களையுங் களைகளையும் முளைப்பிக்கும்” என்றருளினார். அதற்கொப் பாக இயற்கையளவில் பூமியில் முள்ளுங் களையும் ஒருங்கே முளைத்திருப்பது உண்மையானதுந் தவிர, ஞான அளவிலுமப்படியே சம்பவித்திருக் கிறது. எனெனில், முள்ளுங் களையும் பாவமே. அது உலகத்தில் பரவியிருப்பது மறுக்கப்படாத விஷயம். பாவத்தைச் செய்கிறவனின்றி பாவ மில்லை. அவனே அதற்கடிமையாகிறான். நாம் குற்றஞ்செய்த பிதிரிலுள்ளோராகையால் நாமும் பாவிகளே. ஆகையால், நாம் முட்களுக்குங் களை களுக்குஞ் சமானம். ஆனால், பாவம் நிறைந்த இவ்வுலகில் ஒரேயொரு மாசற்ற ஸ்திரீ உதித் தாள். முட்களின் மத்தியில் ஒரேயொரு தூய் மையான லீலி புஷ்பித்தது. பாவப் படுகறை பட்டுள்ள ஆதாமின் கோத்திரத்தில் அருள் மரி யாய்மட்டும் மாசும் பழுதுமில்லாது துலங்குகின் றாள்.

2. மனிதர்களோடு ஒத்துப்பார்க்கையில் மரியாயின் பரிசுத்தத்தனம் விசேஷமாய்த் தோன்றுகிறது. இதுமட்டுமன்று. தனது கன் னிமைத்தனத்தால் மரியாய் மோக்ஷவாசிகளையும் கன்னிகைகளையும்விட மேலாயிருக்கின்றாள். “தேவசுதனுக்கு இருப்பிடமாகவும், இஸ்பிரீத்து சாந்துவின் ஆலயமாகவுமிருக்கப் பாக்கியம்பெற்ற மரியாயின் கன்னிமைத்தனத்திற்கு யாருடைய கற்பு இணை? வானதூதர்களின் கற்பையாகிலும் ஒப்பிடலாமா?” என அர்ச். பெர்நார்து வினவு கின்றார். சம்மனசுக்களையே மரியாய்க்கு ஒப்பிட முடியாவிடின் பாவிகளாகிய பலவீனரராம் நாம் எம்மட்டு? நாம் சாங்கோபாங்க நெறியில் வளர எவ்வளவு முயல்வோராயினும், அர்ச். சின்னப்ப ரோடு “என் புத்தியினது சட்டத்துக்கு வெறுப் பான வேறொரு சட்டம் என் அவயவங்களில் காண்கிறேன்” (ரோ. VII. 20.) “சரீர ஆசை (காம ஆசை) எனுந் தூண்டுகோல் என்னைக் குத் துகிறது. அது என்னை அறையுஞ் சாத்தானின் தூது” (கொ. II. 12, 7) என்று நாமெல்லோ ருஞ் சொல்லக்கூடியவர்களே. ஆனால் மரியாய் மட்டும் முட்களுள் லீலிபோல் மாசற்றுப் பரி சுத்தமாயிருக்கின்றாள்.

“குறையீர்ந்துயர்வான் குடியாயவிவட்
கறையீர்ந்தெழில் காணவெமக் கிருகண்
முறையீந்தலதாயிர கண்முதலா
மிறையீந்தனனே வினிதெனறறைவார்.”

3. மனிதனுக்கு வருஞ் சோதனைகள், உலக ஆசாபாசங்கள்யாவும் முட்களாம். அடிக்கடி யவைகள் நம்மைக் குத்தப்பார்க்கின்றன. சில சமயங்களில் ஆபத்திற்குரியவையாயிருக்கின்றன. ஆனால், மரியாயை அவைகள் ஒருபோதுந் தொட வேயில்லை. சரீரத்தோடிருந்தும், அசரீரிபோல் சீவித்தாள். இகத்தில் ஜீவித்தாளாயினும் பரத் தில் சம்மனசுக்களிருப்பதுபோலிருந்தாள். லீலி யானது தண்டின்மேல் எழும்பியிருப்பதுபோல மரியாய் இவ்வுலக சோதனைகளைவிட்டு எழும்பி நின்றாள். தனது சுத்த கருத்தால் தேவதிரு வுளத்திற்கிணங்கிக் கடவுளைக் கனப்படுத்துவ தையே கொண்டு மேல்நோக்கி நின்றாள்.

4. லீலிப்புஷ்பத்தில் ஆறு வெண்மை யான இதழ்களும் ஆறு பொன் மணிகளுமுள. முன்னையவை சரீரத்தின் கற்பையும், பின்னை யவை மனத்தின் சுத்தத்தையுங் காட்டுகின்றன வென்று அர்ச். பொனவெந்தூரா எழுதுகிறார். கற்பெனும் புண்ணியத்தைக் காப்பாற்ற அவசிய மான ஆறு வழிகளும் ஆறு இதழ்களாம். 1. மது பானவெறுப்பு. “கன்னிகை நஞ்சைப்போல் மது பானத்தை வெறுக்கட்டும். எனெனில் மதுவும் இளமையும் மோக ஆசையை எழுப்பும் நெருப்பு” என்று அர்ச். ஜெரோம் சொல்கிறார். 2. உடை யில்மட்டு. “சாதாரணமாய்க் கரடுமுரடான மரம் மெல்லிய துரும்புகளால் உண்டாக்கப்படாதிருக் கும். அதுபோலவே கற்புள்ள சரீரத்தை மிரு துவான துணியல்லாது கனத்த சாதாரண உடையே கவர்ந்திருக்கும்” என்று அர்ச். பெர் நார்து சொல்கிறார். 3. சோம்பல் பாவத்திற் காதாரம். விசேஷமாய்க் கற்பைக் கெடுக்கும் நஞ்சு. தாவீது ராஜா உழைப்பின்றி சோம்பலா

யிருந்தனன். விபசாரத்தில்விழ நேரிட்டது. 4. ஐம்புலன்களின் காவல். அவைகள்—விசேஷமாய் பார்வையுங் கேள்வியுமே பாவத்திற்கேதுவான வழிகள். யாக்கோபின் குமாரத்தியாகிய தீனுவென்பவள் அவசரமின்றி சிமித்திய ஸ்திரீகளைப்பார்க்க அடக்கவொடுக்கமின்றி வெளியே போனுள். ஹேமர் என்பவன் அவளைப் பற்றிக்கொண்டான். 5. நாவடக்கம். தகாத பேச்சு காமத்தை மூட்டும் அக்கினி. "மோசம்போகாதேயுங்கள். துர்ப்பேச்சுகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கின்றன" (கொரி. I. 15, 33). "கன்னிகையின் வார்த்தைகள் சுத்தம் மரியாதையுள்ளதாகவுஞ் சொற்பமாகவுமிருக்கட்டும்" என்று அர்ச். ஜெரோம் சொல்லுகிறுர். 6. பாவச்சமயங்களை விலக்குகிறது. ஆடவர் பெண்களோடும், பெண்கள் ஆடவரோடும் சரச சகவாசஞ்செய்வது ஆபத்தானது. தாமா என்பவள் அமணனுேடு தனித்திருந்தாள். ஆகவே, கற்பழிக்கப்பட்டாள். "கற்பைக் காப்பாற்ற விரும்புங் கன்னியர்கள், தனக்காபத்தில்லையென்று இறுமாப்பாயில்லாமல் காப்ந்தா யிருக்கவேண்டும். யாதொரு பயமுமில்லையெனத் தோன்றினும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்" என்று அர்ச். பெர்னார்து நற்புத்தி போதிக்கிறுர்.

5. லீலியினிடத்து ஆறு பொன்னிற மணிகளுள. லீலிப்புஷ்பம் எவ்வளவு அழகுள்ளது! அதற்கு முடிசூட்டினுற்போல் ஆறு பொன் மணிகள் அங்கே துலங்குகின்றன. மகிமையுள்ள லீலியாகிய மரியாயே! என்னிடம் பொன்னிறம்போன்ற தேவ அருள் பொலிந்துகிடக்கின்றனவன்றே? சர்வப்பிரசங்கியாரோடு "உண்மைக்கும் வழிக்கும் ஆதாரவான அருள் என்னிடமிருந்தது" என்று நீ சொல்லலாமே?

இவ்வாறு பொன்னிற மணிகளும் மரியாயின் நேசத்திற்கறிகுறி. ஏனெனில், தேவநேசம் ஓர் ஆத்துமாவிலிருப்பின் மூன்று குணங்கள் தோன்றும். அவைகளாவன:—நாம் ஏமாற்றப்பட்டுக் கடவுளை விட்டுவிடாதிருக்க விவேகம். பொறுமையால் கடவுளால் தள்ளப்படாதிருக்கத் தாழ்மை. பசாசால் ஜெயிக்கப்படாதிருக்கத் தைரியம். தேவ சிநேகம் நிலைத்திருக்க மூன்று கருத்துக்களிருக்கவேண்டும். அவர் நமது சிருஷ்டிகராகையால் அவரை முழு இருதயத்தோடு நேசிக்கவேண்டும். அவர் நமது இரட்சண்யத்தின் காரணராகையால் முழு ஆத்துமத்தோடு நேசிக்கவேண்டும். அவர் நமக்குச் சம்பாவனை அளிப்போராகையால் முழுமனதோடு நேசிக்கவேண்டும்.

லீலியானது மரியாயின் கன்னிமைக்கு உவமானமாயுள்ளதென்பது பின்வரும் உதாரணத்தாலும் விளங்கும்.

அர்ச். சாமிநாதர் சபையைச்சேர்ந்த ஓர் சந்நியாசியாருக்கு 'மரியாய் எப்படிக் கன்னியுந் தாயுமாயிருக்கக்கூடுமென்று ஐயம்' மனக்கஷ்டத்தை கொடுத்தது. பிரயாசைப்பட்டு அதை அறிய முயன்றுங் கூடவில்லை. ஆயினும் அதை மறுத்தனரல்ல. சோதனையோ தொலையவில்லை. அக்காலத்தில் அர்ச். பிரான்சீஸ்கு சபையைச் சேர்ந்த ஜில்ஸ் சகோதரரிருந்தார். மிக்க பக்திமான். எல்லோராலும் பரிசுத்தராகப் போற்றப்பட்டவர். சோதனைப்படுஞ் சந்நியாசியார் சகோதரரைக்கண்டு மனக்கவலையை யகற்ற எண்ணினுர். பெரியோர் உத்தரவின்மேல் ஆங்கு செல்கிறுர். மடங் கிட்டிவிட்டது. சகோதரர் அவர் வருவதையும், விஷயத்தையுந் தீர்க்கதரிசனத்தாலறிந்து அவரைக்கொண்டு அழைக்கப்போனுர். சந்நியாசியாரைக் கண்டதும் சகோதரர், தன் கையிலிருந்த தடியைத் தரையில் தட்டி 'சகோதரரே! மரியாய் குழந்தை பெறுமுன்னுங் கன்னிகையென்றுர். அச்சமயம் தரையினின்று ஓர் லீலிப் புஷ்பந் தோன்றியது. இரண்டாந் தடவையுந் தட்டி "சகோதரரே! குழந்தை பெறும்போதுங் கன்னிகை" என்றுர். இன்னெரு புஷ்பந்தோன்றியது. மூன்றும் விசையும் அப்படித் தட்டி, "சகோதரரே! குழந்தை பெற்றபின்னுங் கன்னிகை" என்றுர். இன்னுமொரு புஷ்பந் தோன்றியது. மூன்று புஷ்பங்களையுங்கண்ட சந்நியாசியார் பிரமித்து நின்றுர். சகோதரர் ஒன்றும் பேசாது ஊர் சென்றுர். சந்நியாசியார் மடந் திரும்பினுர். அன்றிருந்து அவரது சோதனை விலகலாயிற்று.

(இன்னும் வரும்)

M. S. M.

பரிசுத்த அக்ஷயனுகிய அமலன் திருவடியில் சேர்ந்தோர் அதைவிடாமல் மற்றெல்லாவற்றையும் விட்டுவிடக்கடவர்.

—(அர்ச். சிலுவை அருளப்பர்.)

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

9-ம் அதிகாரம்.

கடைசி கண்டம்—அகுஸ்தீன் இருதயத்தில் சந்தேகமே சர்வ வியாபகமாயிருக்கிறது—அர்ச். அமிர்தநாதரை அர்ச். மோனிக்கம்மாள் சகாயத்திற்கு அழைக்கிறாள்—தன் குமாரன் இரட்சண்யமடைய முன்னையவிட இருமடங்காய் ஞான வைராக்கியத்துடன் பாடுபடுகிறாள்.

(க. அ. 384—386.)

இதனிடையில் அகுஸ்தீன் மிலான் நகரில் சேர்ந்து தன் உத்தியோகத்திலமர்ந்தார். அப்போது அவரது மனச்சார்பின் நிலைமை அபாயகரமானதே. சத்தியத்தை யெங்கும் தேடியும் அதைக் காணக்கூடாமல் போனதைப்பற்றியும், ஓய்வின்றி அதனை நேசித்தும் அதை யடையக்கூடாமற் போனதைப்பற்றியும், அதைரியங்கொண்டு எதையும் நம்பாதவர்களே விவேகிகளென்று ஒருவிதமாய்த் தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொள்ள முயன்றார். தான் அதுவரைக்கும் விழுந்துகிடந்தது அவிசுவாசமென்கிற படுகுழிப் பாதாளத்தில். ஆழத்திலும் அந்தகாரத்திலும் அனைத்தையும் மேற்கொண்ட இப்பாதாளத்திலிருந்துதான் அவர் வெளியே கிளம்பவேண்டியிருந்தது. அப்படிக் கிளம்பிவந்தது அவருக்கு நல்லதாச்சுது. அல்லாவிட்டால், இரண்டு வருஷ காலம்வரைக்கும் அவர் அந்த அவிசுவாசம் என்னும் பாதாளத்தில் அமிழ்ந்திக் கிடந்ததற்கு, கண்டிதமாய் மிருகத்திற்கொப்பாய்ப்போயிருப்பார். அவர் வெளிச்சத்தைக் கண்டடைய அவருடைய தாயார் அவருக்கு உதவியாயிருக்கும்படியாகவே, கர்த்தர் அவளை அவரிடம் அனுப்பி வைத்தார்.

ஆனால் இந்தப் பயங்கரத்துக்குரிய கண்டத்திலிருந்து அவரைக் காப்பாற்ற அவளால்முதலாய் கூடாமல்போயிற்று. தாய்மார்களின் இருதயங்கள் பரிசுத்தமும் உருக்கமும் சத்தியமும் உள்ளவை. ஆயினும் உள்ளதைச் சொல்லவேண்டுமானால், ஆத்தும இரட்சண்ணியத்திற்கடுத்த ஞான ஜனனம் அல்லது இரண்டாம் ஜனனத்திற்கவசியமான சக்தியும் பரிசுத்தத்தனமும் அவைகளில் கிடையா. தாயின் கண்ணீர்த்தாரையால் ஆரம்பிக்கப்பட்ட இரட்சண்ய அலுவலை, சேசுக்கிறீஸ்துநாதரின் அதிகாரம்பெற்ற குருசுவாமியாரே முடிக்கவேண்டியிருக்கிறது. ஊதாரிப் பிள்ளையானவன் எவ்வளவு ஆழமான பாதாளத்தில் அமிழ்ந்திக்கிடப்பானோ, அவ்வளவு கவலையுடன் அவனைக் கைத்தூக்கி எடுத்துக் காப்பாற்றக்கூடிய கிறீஸ்துவத் தாயாரையும் குருசுவாமியாரையும் கர்த்தரே தெரிந்துகொள்ளுகிறார். இக்காரணத்தைப்பற்றியே அர்ச். மோனிக்கம்மாளை அகுஸ்தீனுக்குத் தாயாராக அளித்த கடவுள், இப்போது அவரை அர்ச். அமிர்தநாதரண்டை கொண்டுபோய்ச் சேர்க்கிறார்.

இந்தப் பரிசுத்த மேற்றிராணியார் அகுஸ்தீனுக்கு வேண்டியதை விளக்கிக்காட்டி, அவரை மெய்ம்மார்க்கத்தில் நடத்த விசேஷத் திறமை கொண்டவர். சிலர் சுபாவத்தில் பதைபதைப்புள்ளவர்கள், மனச்சோர்வுள்ளவர்கள், மனோவிகாரமுள்ளவர்கள். அப்படிப்பட்டவர்கள் எப்படிப் பயிற்சிசெய்யப்பட்டுவருவார்களோ, அப்படியே ஒன்றில் பெருத்த காரியங்களை முடிப்பார்கள். அல்லது ஒன்றையும் முடிக்க சக்தியற்றவர்களாவார்கள். அர்ச். அமிர்தநாதரும் பாலியத்தில் இப்படிப்பட்ட சுபாவமுள்ளவராகவேயிருந்தபடியால், அப்படிப்பட்டவர்களைத் திருத்திச் சரிப்படுத்துவது எப்படியென்று நன்றாயறிந்திருந்தார். அவர் பாலியத்தில் உலகத்திலிருந்து உத்தியோகத்திலும் வித்தியாப்பியாசத்திலும் நாள்கழித்துவந்தவர். ஆதலால் அவருடைய பாலிய சீவியமும் அகுஸ்தீனுடைய பாலிய சீவியமும் இவ்விஷயத்தில் ஒத்திருக்கின்றது. பிறகு அவர் அணியிலக்கணம் படித்துமுடித்து, இன்னும் சிறுவயதாயிருக்கும்போதே, நியாயவாதியாய் புறப்பட்டு நியாயஸ்தலத்தில் சிறந்த கீர்த்திப்பிரதாப மடைந்தார். இதிலும் அவர் சீவியம் அகுஸ்தீனுடைய சீவியத்தை ஒத்திருக்கின்றது. மேலும் அகுஸ்தீனைப்போலவே ஒரு கிறீஸ்துவத்தாய்க்குப் பிறந்த அவர், தமது முப்பதாம் வயதுவரைக்கும் ஞானஸ்நானம் பெற ஆயத்தஞ்

செய்துகொண்டு ஞானோபதேசம் படித்துவந்தார். ஆனால் ஒரு காரியம். அகுஸ்தீனைப்போல நெறிதவறிப் பாவாக்கிரமங்களைப் புரிந்துவராமல் பரிசுத்தராயிருந்தார். அவர் அகுஸ்தீன்மட்டில் கருணைகொண்டு கரிசனைகாட்டியதற்கு இதுவே தக்க முகாந்தரம் என்னத் தகும். ஏனெனில், களங்கரகிதமாய் மனசாட்சியின் கண்டனையின்றி சுத்த சமாதானத்தில் எவன் என்றும் ஜீவித்து வருவானோ, அவன் ஆசாபாசத்தினால் அலைக்கழிக்கப்பட்டு நிலைகுலைந்துபோன ஆத்துமத்தின் நிர்ப்பாக்கியம் இத்தன்மைத்தென்று அநேகமாய் நன்றாய்க் கண்டுபிடிக்கச் சக்தியுள்ளவனாயிருக்கிறான். ஆதலால் அர்ச். அமிர்தநாதருடைய சீவியத்தில் பாவதோஷம் கிடையாதென்பது நீங்கலாக, மற்றப்படி சகல விஷயங்களிலும் அவருடைய சீவியமும் அகுஸ்தீனுடைய சீவியமும் ஒரேவிதமாயிருந்ததாகக் காண்கிறோம். இது ஆச்சரியந்தான்.

அர்ச். அமிர்தநாதர் தாம் சற்றேனும் எதிர்பார்க்காத ஒரு சம்பவத்தினால், அதுவரைக்கும் செய்துவந்த உத்தியோகத்தை விட்டுவிட்டு வேறு அலுவலில் தமது கவனத்தைச் செலுத்தவேண்டியதாயிற்று.

மிலான் நகர் மேற்றிராசனம் காலியானபோது, கிறீஸ்துவர்களுள் இரண்டு கட்சியுண்டாய், ஒவ்வொரு கட்சியாரும் தங்கள் பக்கம் ஒரு குருவானவரை நியமித்துக்கொண்டு, நாங்கள் குறித்திருக்கும் குருசுவாமியாரே மேற்றிராணி ஸ்தானத்தை வகிக்கவேண்டுமென்று ஒரு கட்சியார் சாதிக்க, மற்றொரு கட்சியார் அப்படி கூடாதென்று மறுத்துரைக்க, இப்படி இருகட்சியாரும் மெத்த மூர்க்கத்துடன் வாதாடியபடியால் கடைசியாய் இவர்களுடைய வாக்குவாதம் உதிரக்களரியில் முடியும்போலிருந்தது. அப்போது நகராதிகாரியாயிருந்த அமிர்தநாதர், இந்தக் குழப்பத்தை யடக்கும்படியாகக் கோவிலுக்குப் போனார். ஜனங்களை யமர்த்தும்படி உண்டான ஞாயத்தை அவர் வாக்குச்சாதுரியத்துடன் சொல்லிக்கொண்டிருக்கும்போது, கும்பலில் இருந்த ஒரு குழந்தை, "அமிர்தநாதர் மேற்றிராணியார், அமிர்தநாதர் மேற்றிராணியார்" என்று கூவிற்று.

மாசில்லா அக்குழந்தையின் வாக்கை தேவவாக்காக இரு கட்சியாரும் ஏற்றுக்கொண்டு, காலியாயிருந்த மேற்றிராசனத்திற்கு அமிர்தநாதரையே மேற்றிராணியாராக நியமித்தார்கள்.

அப்போது இன்னும் மந்திரம் கற்றுக்கொண்டிருந்த அமிர்தநாதர், உடனே ஞானஸ்நானம் பெற்று, எட்டு நாள்வரைக்கும் தனிவாசத்தில் ஜெபத்தியானங்கள் புரிந்து, குருப்பட்டம் அடைந்து, மேற்றிராணியாராக அபிஷேகம்பண்ணப்பட்டார். இது நடந்தது இரட்சண்யம் 374-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ம் தேதியன்று.

பொழுதுவிடியும்போது மலராமல், விடிந்து கொஞ்ச நேரஞ் சென்றபிறகுமாத்திரம் மலரும் சில புஷ்பத்திற்கொப்ப, அமிர்தநாதருடைய உத்தம குணலட்சணங்கள் அவர் மேற்றிராணியாராக அபிஷேகமடைந்தபிறகுமாத்திரம் பூரண பக்குவமடைந்தன. இவர் இராஜ தர்மப்ரவீணர். மேற்றிராணிப் பட்டமென்றால் அவருக்குத்தகும். தன் மந்தையின் வைதீக லௌகீக காரியங்கள் மட்டில் கவலைகொள்வார். உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டவும், கேடுகெட்ட அரசர்கள், கடைசியாய் புத்தியுள்ள மனிதனுக்கு இயற்கையாயிருக்கவேண்டிய சாதாரண அறிவோடாவது நடந்துகொள்ளவேண்டுமென்று பாடுபடுவார். பச்சாத்தாபப்படும் பாவிகளுடன் அநேக மணி நேரங்கள்மட்டும் இருந்து, தன் அழுகையினால் அவர்களுடைய கல்லான இருதயங்களைக் கரைப்பார். நெறிதவறிப்போகும் அரசர்களுக்குக் கண்டிப்பான நிருபங்கள் எழுதி, அவர்களைச் சன்மார்க்கத்திற்குத் திருப்புவார். கர்த்தருக்குத் தங்களை யொப்புக்கொடுத்த கன்னியர்களுக்கு அத்தியந்த உருக்கம் நிறைந்த பரிசுத்த ஞான கீதங்களை யியற்றித்தருவார். எப்பருவத்திற்கும் எந்நிலைமைக்கும் இன்றியமையாத காரியங்களைச் சம்ரட்சணைசெய்யவும், எவ்வித அபாயத்திலிருந்தும் தன் மந்தையைக் காபந்துசெய்து அதைப் புண்ணியத்தின் சகல அந்தஸ்திலும் உயர்த்தவும் தகுதியான வேதபாரகரிவரே. மிலான் நகரின் பிரதாபநிறைந்த மகா வந்திக்கத்தக்க அமிர்தநாதர் என்னும் மேற்றிராணியாண்டவர் இப்படிப்பட்டவர்.

ஆயினும் இந்தக் குணாதிசயங்கள் யாவும், முன்னுக்கு அவரிடம் விளங்கவிருந்த குணவிலட்சணங்களுக்கு ஒரு முகவுரையைப்போலிருந்தன. அவரது சீவியத்திற்குக் கிரீடமாயும், அச்சீவியப்

பிரதாபத்தைக் காட்டும் சுந்தர தங்கப் பிரபையாயும் இருந்த இரண்டு உந்நத கிருத்தியங்களுக்கு ஆயத்தமாகவே அவர் அன்றுடம் பரிசுத்தத்தனத்தில் வளர்ந்துவந்தார்.

தியோதோனியுஸ் என்னும் சக்கரவர்த்தி, தெஸ்ஸலோனிக்கா நகரை இரத்தப்பிரளயமாக்கியபிறகு, அவன் மேற்றிராசனக்கோவிலுக்கு வருவதை அர்ச். அமிர்தநாதர் கண்டதும், கோவிலுக்குள் அவன் கால்வைக்கக்கூடாதென்று அக்கோவில் வாசலிலிருந்தே அவர் அவனைத் தடுத்த தைரியத்தைக் கேள்விப்பட்டிராதவன் யார்! அப்படி அவர் தடுத்ததைக் கண்ணுலே பார்த்தவர்கள் அக்காட்சியை என்றும் மறக்க முடியவேமுடியாது.

கோவிலுக்குள் வரக்கூடாதென்று தடுக்கப்பட்ட சக்கரவர்த்தியும், தடைசெய்த மேற்றிராணியாரும் சாமான்யமானவர்களல்ல. மேற்றிராணியார் சக்கரவர்த்தியைக் கூடாதென்று தடுப்பதும், சக்கரவர்த்தி மேற்றிராணியாருடைய கட்டளைக்குப் பணிந்து காலெடுத்துவைக்க தைரியமற்று நிற்பதும், இரு பக்கத்திலும் மெத்த மனவருத்தமுள்ள காரியம். ஒரு காரியம் எவ்வளவு எவ்வளவு மனவருத்தமுள்ளதாயினும் "கடமை" யென்றபோது, தப்பாமல் அதனை யநுசரிக்க வேண்டுமென்பதற்கு நன்மாதிரிகையாக, இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் நடந்துகொண்டவிதம், அக்காலத்திலிருந்து இக்காலம் வரைக்கும் விளங்கிக்கொண்டுவருகிறது.

இந்தச் சமயத்தில் அர்ச். அமிர்தநாதர் காட்டிய தைரியம் ஆச்சரியமுள்ளதாயினும், சக்கரவர்த்தி காட்டியகீழ்ப்படிதல் அதி ஆச்சரியமுள்ளதாயும், யாவருக்கும் பரிதாப சிந்தனையைப் பிறப்பிப்பதாயுமிருந்தது.

இப்போது நாம் பரிசுத்த மேற்றிராணியாருடைய மாளிகைக்குச் சென்று, அவரைக் காணவிருக்கும் ஒரு வாலிபனைக்கண்டு, அவ்வாலிபனுக்கு அவர் நல்வரவுகொடுத்துச் சொல்லும் வார்த்தைகளைக் கேட்போமாக. அவ்வார்த்தைகளே அவ்வாலிபனை அர்ச்சியசிஷ்டவராகவும், பிரதாபம்பொருந்திய வேதபாரகர்களுள் ஒருவராகவும் மாற்றித் திருச்சபைக் களிக்கத்தக்கவையாயிருந்தன.

அகுஸ்தீன் மிலான் நகரில் சேர்ந்ததும், செய்த முதல் காரியங்களில் ஒன்றேதெனில், அர்ச். அமிர்தநாதரைச் சந்தித்ததே. அம்மேற்றிராணியாருடைய நகரத்தில், அவர் உந்நத உத்தியோகத்தில் அமரப்போகிறபடியால், மரியாதைக்காக அப்படியவரைச் சந்திக்கவேண்டியிருந்தது. ஆனுல் அவரைக் காணும்படி இதிலும் மேலான கருத்தும் ஒன்று அவருக்கிருந்தது. ஒரு ஆசிரியர் யோசனையுடன் எழுதுவதேதெனில், "முதிர்ந்த வயதுள்ளவர்களை விசேஷமாய் அவர்கள் கீர்த்தி வாய்ந்தவர்களாயிருக்கும்போது, ஒரு வாலிபன் முதல் முதலாகக் காணப்போவது, விசேஷமான காரியந்தான். அக்கீர்த்தியுடன் அவ்வயோதிபர்களிடம் பரிசுத்தத்தனமும் விளங்கியிருக்கும் போது, அவர்களைக் காணப்போவது அதிலும் விசேஷமே." "நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க, நல்லார்சொற் கேட்பதுவுநன்றே—நல்லார், குணங்கலுரைப்பதுவு நன்றே, யவரோடிணங்கியிருப்பதுவு நன்று."

அகுஸ்தீன் சொல்வது "நான் மிலான் நகரைச் சேர்ந்ததும், என் கர்த்தாவே, உமது தாசனும், உத்தமகுணலட்சணங்கள் அமையப்பெற்றவரும், கீர்த்திவாய்ந்தவருமான அமிர்தநாதரென்னும் மேற்றிராணியாரைக் காணப் போனேன். நான் ஞானக்குருடனுயிருந்தபடியால், அவர் என் நேத்திரங்களைத் திறந்து, உம்மிடம் என்னைச் சேர்க்கும்படியாக, உமது திருக்கரம் என்னை யவரிடம் நடத்திக்கொண்டுபோனது. சங்கைக்கும் வந்தனை வணக்கத்திற்கும் அருகராயிருந்த அவர் தந்தைக்குரிய பட்சத்தோடும், மேற்றிராணியாருக்குரிய பிறசிநேகத்தோடும், என்னை யேற்றுக்கொண்டு மிலான் நகருக்கு நான் வந்தது தனக்கு வெகு சந்தோஷமென்பதாக உறுதியுடன் சொன்னுர். நான் அவரை நேசிக்கத் தொடங்கினேன். ஆனுல் சத்தியத்தைப் போதிக்கும் விற்பன்னராக அவரை ஏற்றுக்கொண்டு நேசிக்கவில்லை. ஏதோ எனக்கு அவர் காட்டிய பட்சத்தைப்பற்றியவரை நேசிக்கத் தொடங்கினேன். ஏனெனில் சத்தியத்தைப் போதிக்கும் விவேக விற்பன்னர், உமது திருச்சபையில் கிடைப்பாரென்று நான் நம்பியிருந்ததில்லை."

பிரதாபம்பொருந்திய பரிசுத்த அமிர்தநாதர், பாலியப்பருவமுள்ள அகுஸ்தீனுக்கு நல்வரவு கொடுப்பதையும், ஒருவர் சித்தசலனங்கொண்டிருக்க, மற்றொருவர் மனோசமாதானம் கொண்டிருப்பதையும், மாசுமறுவில்லாமல் சாந்தி

பிரகாசத்துடன் அஸ்தமிக்கும் சூரியன் திரண்ட கார்மேகங்களால் காந்தி மறைபட்டிருக்கும் உதய சூரியனுக்கு நல்வரவு கொடுப்பதையும் பார்த்தால் கல்லான மனமும் கரையும். அக்காட்சியை விவரித்துக்காட்ட, வித்தையில் தேர்ந்த நிபுண சிரேஷ்டராலாகுமேயொழிய, மற்றப்படி நம்மாலாகாது.

அகுஸ்தீன், அமிர்தநாதரை அவருடைய வீட்டில் சந்தித்தபிறகு, கோவிலில் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க ஆவல்கொண்டார். அர்ச்சியசிஷ்டவர் பிரதி ஞாயிறுவாரமும் தமது சபையாருக்குப் பிரசங்கஞ்செய்து வேதாகமங்களைத் தெளிவாகவும் வாக்குச்சாதுரியத்தோடும் வியாக்கியானித்து,அவைகளிலிருக்கும் அதி கருதலான விஷயங்களைத் திருத்தமும் யூகமுமுள்ள ஒட்டுவமைகளால் அத்தியந்த சாமர்த்தியத்துடன் விளக்கிக்காட்டுவார்.

அகுஸ்தீனுடைய ஆத்துமம் சிந்தாகுலத்தி லிருக்கும் இச்சமயத்தில், அமிர்தநாதர் செய்யும் இத்தகையான பிரசங்கத்தைவிட அவருடைய மனதுக்கு ஆறுதலளிப்பது வேறெதுவுங் கிடையாது. அன்புடன் அவர் சொல்லும் வார்த்தைகள் தன் இருதயத்தில் பெருங் காயங்களை யுண்டாக்குமென்று சற்றேனும் சந்தேகங்கொள்ளாமல், அவாது பிரசங்கத்தின் வசியத்திற்குத் தன்னை முழுதுமே ஒப்படைத்துவிட்டார்.

ஆனால் முன்னையவிட அதிக அவநம்பிக்கை தன் மனதில் உண்டாவதாகச் சீக்கிரத்தில் அவருக்குத் தெளிவாய்த் தெரியவந்தது. மனேக்கிய மதத்தில் தான் கொண்டிருந்த நம்பிக்கை யாவும், குறிப்பேயில்லாமல் மாயமாய் மறைந்துபோயிற்று. சத்தியமென்று எண்ணப்பட்டுவந்த சகலமும் அபத்தமாயிற்றென்று கண்டார். ஆயினும் கத்தோலிக்கு வேதத்தைப் பரிசோதித்துப் பார்க்கலாமென்றவருக்கு மனம் வரவில்லை. ஆனதால் சத்தியமென்பதே கிடையாதென்று தீர்மானித்து, மதபோதனைகள் யாவையும் நிராகரித்துத்தள்ளி, இனி அப்போதனைகள்மட்டில் கவனம் செலுத்தாமல், தான் இன்னும் கையாடிவந்த ஏக பயிற்சியாகிய வித்தையை விருத்திசெய்து, வாக்குச்சாதுரியத்துடன் பேசவும் பாஷாலங்காரத்துடன் எழுதவும் நன்ருய் கற்றுக்கொள்ள தீர்மானம்பண்ணிக்கொண்டார்.

அவர் சொல்வது "சத்தியமானது என்னை அடிபார்தாளத்தில் அமிழ்த்திவிட்டதைக்கண்டு, அவநம்பிக்கையோடு நான் இருந்த நிலைமை யதுவே. பேசும் பொருளைக் கவனியாமல் அதை யிகழ்ந்துதள்ளி, பேசும் நடையைமாத்திரம் கவனித்துவந்தேன். உம்மிடம் என்னைச் சேர்க்கும் மார்க்கத்தைத் தேடுவதில் அவநம்பிக்கைகொண்டேன்."

உண்மையைச் சொல்லவேண்டுமானுல், அகுஸ்தீன் கள்ள நியாயவாதியாகவும், வாக்கலங்காரராகவும், எதிர்மொழியைத் தேடுகிறவராகவும், நல்ல வாசகப்போங்கை நாடுகிறவராகவுமாயிருந்தார். ஆதலால் அவர் தன் இருதயத்தையும் மனசாட்சியையுமாத்திரமன்று, தன் புத்தித்திறமையையுங்கூட இழப்பதுபோலிருந்தது.

இந்தக் கண்டத்தில் இருக்கும்போதுதான் மோனிக்கம்மாள் வந்து சேர்ந்தாள். தாயும் பிள்ளையும் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கண்டபோது, என்ன நடந்திருக்குமென்று நாமே நமது புத்தியினுல் யூகித்துக்கொள்ளலாம். குடும்பத்தார்களுள்ளிருக்கும் பாசப்பற்றுதல், துக்கவேளையில் அல்லாமல் மற்றச் சமயங்களில் அவ்வளவு விசேஷமாய்த் தோன்றுகிறதில்லை. அகுஸ்தீன் துக்கத்திலிருந்தார். மோனிக்கம்மாளும் வியாகுலத்திலிருந்தாள். துக்கப்பெருக்கங் கொண்ட அவர்களுடைய ஆத்துமங்கள் ஒன்றில் ஒன்று உபசாந்தி தேடின.

சந்தேகமின்றி, கலக்கங்கொண்ட பார்வையுடன் கருத்தாய்த் தன்னை யுற்றுநோக்கும் தன் தாயாருக்கு ஆறுதலளிக்கும்படியாக, தான் மனேக்கியனல்லவென்று அகுஸ்தீன் அவளுக்கு முதலடியில் தெரிவித்தார். இதைக் கேட்டபோது மோனிக்கம்மாள் முகத்தில் ஆச்சரியமாவது சந்தோஷமாவது தோன்றவில்லை. இதென்னவென்று அகுஸ்தீனும் வியப்புற்ருர். ஆம்,மோனிக்கம்மாள் அதிசயப்படவில்லைதான். புத்திக்கு ஒவ்வாத அபத்தம் நிறைந்த வலைச்சிக்கிலிருந்து அகுஸ்தீன் விடுபட்டு வெளிவருவதில் அதிசயமான காரியம் யாது? ஆம், மோனிக்கம்மாள் சந்தோஷங்கொள்ளவில்லைதான். அவர் பத்தியும் உருக்கமும் நிறைந்த கத்தோலிக்கு கிறீஸ்துவரானுல்மாத்திரம், அவளுக்குச் சந்தோஷம் உண்டாகுமேயல்லாது மற்றப்படி எவ்விதத்

திலும் ஆகா. ஆயினும் அவர் நல்ல கிறீஸ்துவ ராவாரென்று அவள் என்றும் நம்பிக்கைகொண்டிருந்தாள்.

ஆதலால் அவள் அகுஸ்தீனுக்கு மறுமொழியாக, நீ உத்தம கிறீஸ்துவனுவதைப் பார்க்கத்தான் ஆசிக்கிறேன். இக்கருத்திற்காகவே நான் புரிந்துவரும் மன்ருட்டை கர்த்தர் அளிப்பாரென்று ஒரு அர்ச்சியசிஷ்டவர் கொடுத்த நம்பிக்கையாலும் தாய்க்குரிய உணர்ச்சியாலும் தைரியங்கொண்டிருக்கிறேன். நான் மரிக்குமுன் நீ கிறீஸ்து மார்க்கத்தைத் தழுவி அதில் ஒழுகி வருவதை, தப்பாமல் காண்பேனென்று உறுதியோடு சொன்னுள். அகுஸ்தீன் தன் தலையை யசைத்து வெறுப்புடன் புன்சிரிப்புகொண்டார். ஏனெனில் சத்தியம் என்றும் கிடைக்கப்போகிறதில்லையென்று அவநம்பிக்கைகொண்டு, வேத போதனைகளை ஆராய்ச்சிசெய்வதையே பற்றற ஒழித்துவிட்டிருந்தார்.

ஆனல் கண்டிப்பாய் இதுதான் மோனிக்கம்மாளுக்கு நம்பிக்கையைப் பிறப்பித்தது. ஏனெனில் தன் மகனை அவள் நன்ருய் அறிவாளாகையால், விசுவசிக்கவும் நேசிக்கவும் சிருஷ்டிக்கப்பட்ட அவர், அப்படி ஒரு விசுவாசமுமின்றி வெறுமையில் திருப்திகொள்வாரென்று அவள் சற்றேனும் நம்பவில்லை. அவர் சந்தேக சாகரத்தில் அமிழ்ந்திப்போய், தான் கைப்பற்றிப் பிடித்துத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, விசுவாசம் என்னும் ஒரு துண்டு மரமாவது இல்லாமல் முழுகிப்போவதைக்கண்டு அவருக்கு வந்திருக்கும் கண்டம் கனத்தது என்றுணர்ந்தாள். ஆயினும் அக்கண்டம் கொஞ்சத்தில் சூரியனைக் கண்ட பனிபோல், முற்றிலும் ஒழியுமென்று அவளுக்கு முன்னுணர்ச்சியிருந்தது. ஆதலால், ஒரு விஷயத்தில் மனவாறுதலடைந்தாலும், இன்னெரு விஷயத்தில் முன்னுக்கு என்ன ஆகுமோ வென்று அச்சங்கொண்டு, ஒரு நிமிஷமேனும் வீணில் கழிக்காமல், அவருடைய இரட்சண்யத்திற்காக மேலும் மேலும் ஜெபம்புரிந்தும், பூசை பலிகளை ஒப்புக்கொடுத்தும், தானதருமஞ்செய்தும், இந்தப் பயங்கரத்துக்குரிய கண்டம் சீக்கிரம் தொலைந்துபோய், அவர் மனந்திரும்பும் நேரம் துரிதமாய் வரும்படியாகப் பிரயாசைப் படுவது, தன் கடமையென்பதாக உணர்ந்தாள்.

ஆதலால் தன் மகனை ஆலிங்கனம் செய்த பிறகு அவள் செய்த முதல் காரியம் எதெனில், அர்ச். அமிர்தநாதரைத் தேடிப்பிடிப்பதே. அவருடைய பிரசங்கத்தைக்கேட்டே அகுஸ்தீனுக்கு மெத்த மனமாற்றமுண்டாயிற்றென்று அவள் அறிந்துகொண்டு அதற்காக அவருக்குத் தன் நன்றிமொழிகளை ஒப்புக்கொடுக்க ஆவல்கொண்டாள். இதுவுமன்றி, அகுஸ்தீன் விஷயமாய் அவர் என்ன நினைக்கிருரென்று அறிந்துகொள்ளவும், அவருடைய இரட்சண்யத்தின்மட்டில் தனக்குண்டான சந்தேகங்களையும், பயத்தையும், முன்னுணர்ச்சியையும், நம்பிக்கையையும், அவருக்கு வெளிப்படுத்தவும், அவர் அகுஸ்தீனேடு நெருங்கிய சிநேகங்கொண்டு எப்படியாவது அவரை ஒரு கிறீஸ்துவனுக்கவேண்டுமென்று, முன் தான் தகாஸ்தேயிலிருந்த வயோதிப மேற்றிராணியாரைக் கெஞ்சினதைவிட, அதி உருக்கத்துடன் கெஞ்சி கேட்டுக்கொள்ளவும் ஆசித்தாள்.

அவளைக் கண்டதும் அமிர்தநாதருடைய மனமுருகினது. கடவுள்மட்டில் அவள் கொண்டிருந்த வேகமான நேசத்திலுைம், தன் குமாரன்மட்டில் கொண்டிருந்த உருக்கமான பாசத்திலுைம் நிறைவுகொண்டிருந்த அவளது முகத்தைப்பார்த்து, தம் முகத்தைத் திருப்பிக்கொள்ள அவரால் எலவில்லை. மேலும் ஒருதரம் அவள் தம்மண்டைவந்து பேசிப்போனது வெகுகாலத்திற்கு முன்னென்ருலும், அதை யவர் மறந்ததில்லை. அகுஸ்தீனைக் காணும்போதெல்லாம் அப்படிப்பட்ட தாயார் அவருக்கிருப்பதைப்பற்றி அவரை யவர் வாழ்த்தத் தப்பமாட்டார்.

(இன்னும் வரும்.)

---

1. எந்த மனிதனும் எதையும் அறிகிறதற்கு இயல்பாகவே ஆசைப்படுகிருன். ஆனல் "தெய்வபயமில்லாத அறிவினல் என்ன பிரயோஜனம்?"

தன்னை அறியாத வானமண்டலத்தின் ஓட்டத்தைக் கவனிக்கிற ஆங்காரியான சாஸ்திரியைவிட, சர்வேசுரனுக்கு ஊழியம்பண்ணுகிற தாழ்ச்சியுள்ள நாட்டுப்புறத்தான் சந்தேகமற உத்தமன்.

தன்னைத்தான் நன்ருய் அறிகிறவன் தன்னை நீசனுக மதிக்கிருன்; மனிதருடைய புகழ்ச்சிகளால் அவன் சந்தோஷமடைவதில்லை.

A SHORT SKETCH OF THE LIFE OF FR. BESCHI.

சங். வீரமாமுனிவருடைய சரித்திரச் சுருக்கம்.

(முன் தொடர்ச்சி.)

4-ம் பிரிவு.

வீரமாமுனிவர் ஐயம்பேட்டையில் உழைத்தல்.

தஞ்சாவூர் நாட்டின் அரசர் கிறீஸ்து வேதத்துக்குப் பெருஞ் சத்துருக்களாய் எழும்பி அதை வேரோடு அழித்துவிட சர்வ பிரயாசைப்பட்டு வந்தார்களென்று ஏற்கெனவே அறிவோம். மேலும் அத்தேசத்தின் கடை யெல்லைமுதற்கொண்டு கடற்கரைவரைக்கும் பரவியிருந்த தேசத்திலுள்ள கிறீஸ்துவர்களும் தங்கள் பரிசுத்த வேதத்தை அனுசரித்து தேவத்திரவிய அனுமானங்களைப் பெற பல விக்கினங்கள் நேரிட்டன. இதற்குக் காரணம் இந்துக்களான சிற்றரசர்களே. அதெப்படியெனில் அந்நாட்டுக்கு அதிபதியான உடையார் என்னும் சிற்றரசன், பண ஆசைகொண்டவனாய், தன் தேவர்கள்மட்டில் வைராக்கிய பத்திகொண்டு சத்திய வேதத்தை அடியோடு ஒழித்துவிடக் கோறி குருக்களையுங் கிறீஸ்துவர்களையும் விரோதித்து துன்பப்படுத்தினதினால், ஸ்வாமிமார்கள் அத்தேசத்தைவிட்டு அகலும்படி நேரிட்டது. பாவம்! அந்த நிர்ப்பாக்கிய கிறீஸ்துவர்களை முற்றிலும் விட்டுவிட மனமின்றி அனேக ஆபத்துக்குள்ளான அத்தேசத்தில்போய் உழைப்பதற்கு வீரமாமுனிவரே தகுந்தவரென்று சிரேஷ்டர்மார் நிச்சயித்து அவரை அந்நாட்டுக்கு அனுப்பினார்கள். வீரமாமுனிவரோவெனில் பெரும் ஆபத்துக்குரிய இவ்வேலையை சந்தோஷத்துடன் கையேற்றுக்கொண்டு தாமதமின்றி அவ்விடத்துக்குப் புறப்பட்டார். 25 வருஷங்களுக்குமுன் அந்நாடுகளில் மு. அருளானந்தர் மகா விஸ்வாச ஊக்கத்துடன் வேதம் போதித்து, புதுமைகளைச் செய்து அனேக ஆயிரம்பேருக்கு ஞானத்தீட்சை கொடுத்ததை வீரமாமுனிவர் நினைவுகூர்ந்து, பத்தி விஸ்வாசத்தில் அவரை பின்சென்று, நல்ல ஆயனைப்போல, மழை காற்றென்றும், வெயில் குளிரென்றும் பாராமலும் பசிதாகத்தைச் சட்டைசெய்யாமலும் வெள்ளம்பெருகி ஓடும் ஆறுகளையும் ஓடைகளையும் கடந்து கள்ளர் நிறைந்த அடர்ந்த காடுகளில் மகா கஷ்டத்துடன் நடந்து நெடும்பிரயாணஞ் செய்வார். அவர் பிரயாணஞ்செய்யும் ஊர்களிலும் கிராமங்களிலுமுள்ள கிறீஸ்துவர்களைத் தேடிப்பார்த்து அவர்களுக்கு வேதம்போதிப்பார். வேதத்தில் தத்தளித்தவர்களை ஸ்திரப்படுத்துவார். பாவிகளை மனந்திருப்புவார். வியாதிஸ்தரைச் சந்தித்து ஏழை எளியவர்களுக்கு சகாயம் புரிந்துகடைசியாய் சகலருக்கும் ஞானோபதேசம் படிப்பித்து தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றுவார். வெகுநாளாய் குருக்களுடைய முகத்தைப் பார்க்கப் பாக்கியம்பெறாத அந்த ஏழைக்கிறீஸ்துவர்கள் வீரமாமுனிவரைக்கண்டபோது ஒரு சம்மனசைப் பார்ப்பதுபோல சந்தோஷித்து மகிழ்ந்து அவருடைய புத்திமதிகளை ஆசையுடன் கேட்டு தேவத்திரவிய அனுமானங்களை விஸ்வாசபத்தியுடன் பெற்றுக்கொண்டார்கள். இதைப் பார்த்த ஸ்வாமியாருக்கு முன் உண்டாயிருந்த பயபிராந்தமும் கஷ்டவருத்தங்களும் காற்றாய்ப் பறந்து ஞான சந்தோஷ ஆறுதலால் அவரிருதயம் நிறையப்பட்டது. அதிகாரிகளின் தொந்தரையைப்பற்றி தனிமையான இடங்களில் கிறீஸ்துவர்கள் கூடும்படி நேரிட்டது. ஜெபம், திவ்யபூசை முதலிய தேவத்திரவிய அனுமானங்களை இரவில் செய்து முடிப்பார் ஸ்வாமியார். அவர் அந்நாடுகளில்வேதம் போதிக்கும்போது, தங்க வசதியான இடமில்லாததினால் நெருக்கமும் சுத்தமற்றதுமான மாட்டுத்தொழுவங்களில் தங்கி வசிப்பார்.

1720ஆ முடிவில் அந்நாட்டுக் கிறீஸ்துவர்களுக்கு ஒரு கோவிலைக் கட்ட வுத்தேசித்து நவாபுக்குச் சொந்தமான எயிலூர் என்னும் ஊரில் அதைக் கட்டினார். அந்தக் கோவிலுக்குப் பிடித்த செலவை ஷ நவாபே கொடுத்தார். இவ்வளவு நெருக்கிடைப்பட்டபோதிலும் அந்த வருஷத்தில் ஸ்வாமியார் அநேக அஞ்ஞானிகளுக்கு ஞானத்தீட்சை கொடுத்தார். மு. அருளானந்தர் காலத்தில் கொருலி குவாத்தூர் என்னும் இடங்களில் கட்டப்பட்டிருந்த கோவில்கள் பாழாய்ப் போனபோதிலும் தென்னூர் ஐயம்பேட்டை

யிலுள்ள கோவில் இந்நாள்மட்டும் பத்திரமாய்க் காப்பாற்றப்பட்டிருக்கிறது. தற்போது அது கும்பகோண மேற்றிராசனத்துக்கு உட்பட்டிருப்பதுடன் அதில் 8,000 கிறீஸ்துவர்களிருக்கிறார்கள்.

எயிலூர் பங்கு உண்டானதெப்படியெனில் அதைச் சுற்றிலுமிருந்த நாடுகள் ஆர்காட்டு நவாபுக்குச் சொந்தமானவை. ஷை நவாபை சந்திக்கும்படி கூடலூரிலிருந்த இங்கிலீஷ் கவர்னர் புதுச்சேரியிலிருந்த ஒரு சேசு சபை குருவானவருடன் புறப்பட்டுப்போனார். குருசுவாமியார் நவாபுடன் சம்பாஷிக்கையில் தமது நாட்டிலுள்ள கிறீஸ்துவக் கோவில்களைப் பாதுகாக்கும்படிக் கேட்டுக்கொண்டார். நவாபும் அவருடையவேண்டுகோளுக்குச் சம்மதித்ததுடன் ஒரு கோவிலைத் தமது சொந்தசெலவால் கட்ட சம்மதித்து அதற்காகத் திரண்ட திரவியத்தையுங் கொடுத்தார். கொரமாண்டல் கிறீஸ்துவர்களுக்காக சேலத்துக்குச் சமீபத்தில் கொள்ளிடக்கரைக்கு அருகாமையில் நவாப்பு கொடுத்த பணத்தால் ஒரு கோவில் கட்டப்பட்டது. ஆனால் சிலகாலத்துக்குப்பின் கொள்ளிடப்பெருக்கத்தால் அது இடிந்துபோனது. கோராலிலுள்ள கோவிலும் வேத விரோதிகளால் நாசமாக்கப்பட்டது. 1712 வருஷத்தில் எயிலூருக்குப் போனபோது அவ்வூர் கோவிலை மராமத்துசெய்து ஏழை ஜனங்களுக்கு சிறு வீடுகளை எழுப்பி, வெள்ளப்பெருக்கத்தால் அவ்வூருக்கு நஷ்டமுண்டாகாதபடி ஒரு அகழுங் கட்டிவைத்தார். சில வருஷங்களுக்குப்பின் வீரமாமுனிவர் கொரமாண்டல் நாடுகளிலுள்ள கிறீஸ்துவர்களைச் சந்தித்து பங்கு விசாரணைசெய்தபோது சொல்லிமுடியாத கஷ்ட நிர்ப்பந்தங்களையும் பசிதாகத்தையும் வியாதி நோவுகளையும் பொறுமையுடன் சகித்து தேவ வார்த்தையாகிற ஞான விதையை தேசமெங்கும் பரப்ப ஆசைகொண்டார். அந்நாட்டில் நாலாபக்கமும் பரவியிருந்த கிறீஸ்துவர்கள் இரு கரை புரண்டோடும் நதிகளைக் கடந்து சுவாமியாரிருந்த ஊருக்குச்சென்று கர்த்தர் உயிர்த்த திருவிழாவை மகா பத்தி விசுவாசத்துடன் கொண்டாடி தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

1714 வருத்தில் வீரமாமுனிவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குருக்கள்பட்டியென்னும் ஊருக்கு மாற்றப்பட்டார். அவரந்த விசாரணையிலிருந்தகாலத்தில் சபையின் பெரிய வார்த்தைப்பாடுகளைக் கொடுக்கும்படி உரோமை அதிசிரேஷ்டரிடத்தினின்று உத்தரவுபத்திரம் அனுப்பப்பட்டது. அவர் அந்தக் கடிதத்தைப் பார்த்த க்ஷணமே சந்தோஷமகிழ்ச்சியால் பூரித்து, அர்ச். பாப்பானவரிடத்தினின்று இப்பேர்ப்பட்ட விசேஷ உத்தரவைப் பெற்று அனுப்பிய தமது அதிசிரேஷ்டருக்கு அநந்த வந்தனங்களை புரிந்து தாம் சாகுமட்டும் சேசு சபையிலிருந்து சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்யும்படி சர்வேசுரனைப்பார்த்து மன்றாடும்படி விண்ணப்பஞ்செய்துகொண்டார். மேலும் சிலகாலத்துக்குமுன் தாம் வேதத்துக்காகப் பிடிபட்டு சிறையிலடைக்கப்பட்டு மரணத்தீர்ப்புப் பெற்றதாகவும், ஆனால் சிலருடைய சிபார்சின்மேல் தாம் விடுதலை செய்யப்பட்டதாகவும் அறிக்கைசெய்தார். இது நிற்க, தாம் சர்வேசுரனுக்காகத் தமது இரத்தத்தைச் சிந்த நேர்ந்த நல்ல சமயத்தை யிழந்ததினால் துக்கப்பட்டு, இனிமேல் அப்பேர்ப்பட்ட பாக்கியம் தமக்கு கிடைக்கும்படி சர்வேசுரனைப் பார்த்து பிரார்த்திக்கும்படி மன்றாடி அக்கடிதத்தை முடித்தார்.

வீரமாமுனிவர் வேதத்துக்காக பிடிபட்ட வரலாறாவது! இவர் தமது புது பங்கிலுள்ள ஊர்களைச் சுற்றித்திரிந்து மிகவும் சிரத்தையோடும் ஊக்கத்தோடும் வேதம் போதித்ததினால் அநேகர் சத்திய வேதத்தைக் கைக்கொண்டார்கள். உயர்குலத்தாரான அநேகரும் சத்திய வேதப் படிப்பினையைத் தீர்க்க ஆராய்ச்சிசெய்து அதுவே மெய்யான வேதமென்று அறிந்து ஞானதீட்சை பெற்றார்கள். இந்தப் பங்கைச் சேர்ந்த கயத்தார் என்னும் ஊரில் அனேக மேற்குலத்தார் கிறீஸ்துவர்களாகி அவ்வூர்ப் பாளையக்காரனும் வீரமாமுனிவருக்கு ஸ்நேகிதனானான். இவ்வாறு அவ்வூரார்களனைவோருங் கிறீஸ்துவர்களானதால், அக்கியானக்கோவிலின் தேர் திருவிழாக்கள் நின்றுபோயின. ஆகையால் பிராமணர் சத்திய வேதக் குருக்கள்மட்டில் கோப வைராக்கியங்கொண்டு அவர்களைப் பழிவாங்கத் தருந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்நாட்டுக்கு அதிபதியாக நியமகம்பெற்ற லோகநாதன் என்னும் உத்தியோகஸ்தனிடம் பிராமணர்சென்று கிறீஸ்து வேதத்தால் தங்களுக்குண்

டான பெருத்தநஷ்டங்களைப்பற்றி முறையிட்டுக் கொண்டார்கள். இந்த லோகநாதன் சிறுபத்தில் பரம ஏழை. பிழைப்புக்காகத் தூத்துக்குடிக்குச் சென்று அவ்விடத்தில் ஒரு கிறீஸ்துவ பிரபுவின் உதவியால் கல்வி பயிற்சிபெற்று சத்திய வேதத்தையும் அறிந்தான். மேலும் தன் உபகாரியின் உதாரகுணத்தால் பெரும் உத்தியோகத்தில் அமர்ந்தான். ஆனால் பால்கொடுத்து வளர்த்தவனைத் தீண்டின சர்ப்பத்துக்குச் சமானனான இந்த இரண்டகன் சத்திய வேதத்தையும் அதன் போதகர்களையும் விரோதித்துவந்தான். கயத்தாரிலும் அதைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலுள்ளவர்கள் கிறீஸ்துவர்களானதைப்பற்றி லோகநாதன் கேள்வியுற்று கோபாவேஷங்கொண்டு அவர்களுக்கு துர்ப்புத்திசொல்லி நயபயத்தைக் காட்டியும் அவர்களதை சட்டைசெய்யாமலிருப்பதை அவன் கண்டு முன்னிலு மதிகக்கோபங்கொண்டு புது வேதத்தை வேரோடு அழிப்பதற்கான உபாய தந்திரங்களைச் செய்ய முயற்சித்துக் கொண்டுவந்தான்.

(இன்னும் வரும்.)

J. M.

MARIAN CONGRESS AND THE POOR.

மரியாயின் மகா சங்கமும் ஏழைகளும்.

மரியாயின் மகா சங்கத்தை தரிசிக்க விரும்புவோருக்கு நேரிடக்கூடிய செலவுகளின் தோராயமான மதிப்பை நம் சந்தாதாரர்களின் பிரயோசனத்துக்காக சென்ற மாதம் சஞ்சிகையில் குறிப்பித்திருந்தோம். இதை வாசித்த நண்பர்களிலொருவர், விஷயா விஷயங்களை நன்கு ஆராயாமல், இச்சங்கம் ஆஸ்திக்காரருக்கேயன்றி, ஏழைகளுக்காக ஏற்படுத்தியதல்லவென்றும் இதை முன்னின்று நடத்தும் காரியதரிசிகள் கோட்டீஸ்வரர்களாய்விடுவார்கள் என்றும், முறையிட்டுஎழுதியிருக்கிறார். அவர் முறைப்பாடுகளுள் முக்கியமானது, சங்கக்கூட்ட நடவடிக்கைகள், ஆராதனைகளாகியவைகளைப் பார்க்க ஏற்படுத்தியுள்ள பிரவேச கட்டண விகிதத்தைப்பற்றியதே. கட்டணங் கொடுக்கமுடியாத ஏழைகள் அவைகளைத் தரிசிக்கும் பாக்கியத்துக்கு அருகாராகாமற் போகிறார்களே என்கிறார். இவருக்கும் இவரைப்போன்றவர்களுக்கும், இருக்கும் நிலைமையை ஒருவாறு விளக்க முயலுவோம். நாமிருக்கும் ஒவ்வொரு ஊரிலும், நமது கோவில் பேர்கொண்ட முக்கிய வருஷாந்திரத் திருவிழா மகோற்சவம் நடக்கும்போது, அவ்வூர் ஜனங்களும், அதை யடுத்துள்ள சிற்சில கிராமங்களினின்றுவரும் ஜனங்களும் ஏக காலத்தில் கோவிலுக்குள் இருப்பதற்கு இடம்போதாமல் பல சங்கடங்கள் படுவதை மறுப்பார் ஒருவருமிருக்க மாட்டார். மேலும் எல்லாருக்கும் இடம் போதாமையால் அனேகர் வெளிப்புறத்திலும், கதவினிடத்தும், பலகணிகளிடத்தும் நின்று பூஜை ஆராதனை பிரசங்கம் முதலிய சடங்குகளைக் காண்பதையும் நாம் கண்கூடாக கண்டுவருகிறோம். இப்படியிருக்க, ஷை மரியாயின் மகா சங்க வைபவம், ஒரு ஊரல்ல இரண்டு ஊரல்ல. இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய மூன்று பெரிய நாடுகளிலுள்ள பல நூறு பட்டணங்கள், ஊர்கள், கிராமங்களின் கிறீஸ்துவர்கள் அனைவருக்கும் பொதுவானது. இந்த நாடுகளிலெல்லாம் ஷை நண்பரைப்போன்ற ஏழைகள் எத்தனை பேரிருப்பாரென்றும், ஏற்படுத்திய கட்டணங்களைக் கொடுத்துவரக்கூடிய பணக்காரர் எத்தனை பேரிருப்பாரென்றும், இவர்களெல்லோரும் ஒருமிக்க இந்த மரியாயின் மகா சங்கத்தைப் பார்க்க வருவார்களானால், சென்னையில் இதற்கென்று ஏற்படுத்தக்கூடிய இடங்கள் போதுமாவென்பதையும், அவ்விடங்களில் எல்லோரும் சங்கடமின்றியிருந்து வைபவத்தைத் தரிசிக்கக்கூடுமாவென்பதையும் நண்பர்கள் கவனிக்கவேண்டும். டிக்கட்டில்லாமல், கட்டுத்திட்டமில்லாமல் விடப்படுமானால், தென்னிந்தியா ரயில்வேயின் முக்கிய ஸ்டேஷன்களில், அதிக பிரயாணிகள் கூடும் நாட்களில், மூன்றாவது கிளாஸ் டிக்கட்டுகள் வாங்குமிடத்தில் நேரிடுகிறதுபோல, நெருக்கமும், ஒடுக்கமும், இடியும், புடையும், உதையும், மிதியும், நசுக்கமும் புழுக்கமும், மூச்சுத்திணறலும், சண்டையும் சச்சரவுமாகிய பல சங்கடங்கள் சாதாரணமாய் உண்டாகும். எத்தனை ஸ்திரீகள், பாலகர்கள் நசுக்குண்டுபோவார்களோ

தெரியாது. நமது மரியாயின் மகாசங்க நடவடிக்கைகள்யாவும் யாதொரு தடங்கலின்றி அமைதியாயும், ஆடம்பரமாயும் நடைபெற வேண்டுமென்பதையும் அமைதியின்றி, சமாதானமின்றி, பக்தி உருக்கமான உணர்ச்சிக்கு இடமின்றி, கூச்சல், இரைச்சல், கஷ்டம், துன்பம் முதலிய அசௌகரியங்கள் மத்தியில் எல்லோரும் ஞான நன்மையடையாமற் போவதற்குப்பதிலாக சிலராவது அந்நன்மைகளை அடையும்பொருட்டுக் கட்டண விகிதம் ஏற்படுத்தப்பட்டது. இவ்விஷயங்களையும், மரியாயின் மகா சங்கம் நன்கு நடைபெறும்படிக்கான இதர விஷயங்களையும், சென்னை அதிமேற்றிராணியார், மயிலை மேற்றிராணியார், ஆகியவர்களைத் தலைமையாகக்கொண்டு அறிவு அநுபோக ஞானம் நிறையப்பெற்றுள்ள நிர்வாக சபையார் தீரயோசித்து ஏற்படுத்திய திட்டங்கள் அனைத்தும் சரியென்று ஒப்புக்கொள்ளுதல் உசிதமாகும்.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—3.

டோலிடோவுக்குப் பிரயாணம்.

(முன் தொடர்ச்சி.)

திடீரெனத்தோன்றி மறைந்த உருவைக்கண்டு ஹக்கீமும் அலியும் பயத்தால் மூர்ச்சித்துக் கீழே விழ்ந்துவிட்டார்கள்; ஒன்றுக்குமசையாத் தீரநெஞ்சனாகிய ஆல்டீமனும் அச்சமயம் ஒருவாறு மனத்திகில் கொண்டு, “அது என்ன? இதற்குமுன் அதைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த உருவம் எங்கிருந்து வருகிறது? மோட்சத்திலிருந்தா அல்லது நரகத்திலிருந்தா?” என்று கூவினான்.

பயம் அடங்கி மூர்ச்சை தெளிந்து பேசுஞ் சக்தியுண்டானவுடன், அலியென்பவன், “கடந்த சில நாட்களாய் அந்த மாயா உருவம் இந்தச் சிறைச்சாலையின் தாழ்வாரங்களில் தோன்றி யுலாவிவருவதாக காவற்காரர் சொல்லக் கேள்விப்பட்டேன். ஆனால் இதுகாறும் நான் அவர்கள் பேச்சை நம்பவேயில்லை. அவர்கள் சொன்னதுண்மையென்று இப்போதுதான் தெரிகிறது” என்றான்.

“அவ்வுருவத்தை அப்படியே பிடித்துக் கொள்ள ஒருவருக்கும் தைரியம் வரவில்லையா?” என்று ஆல்டீமன் கோபத்தோடு கேட்டான்.

“என் ஆண்டவரே, எஜமானே, மறுவுலக மக்களிடம் அப்படி நடந்துகொள்வது யுக்தமில்லாததுடன் விபத்துக்கு மிடமாயிருக்கும். மனிதர்களைவிட அவர்களுக்கு வல்லமை யதிகம்; அவர்களை நோக்கி வீசிய வாள் அல்லது எய்த அம்பு, அப்படிச் செய்தவனையே திரும்பிவந்து தாக்கும் எனக் கேள்விப்பட்டதில்லையா?” என்றான் ஹக்கீம்.

தோன்றிய மாயா ரூபமும், ஹக்கீமின் மொழிகளும் ஆல்டீமன் மனதில் ஒருவித நடுக்கத்தையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணினபடியால், அவன் நினைத்த கொலைப்பாதகத்தை விட்டொழித்து, கார்சியாஸ் பிரபுவை வெம்பகை நிறைந்த முகத்துடன் பார்த்தவண்ணம், வாளை உரையில் போடும்படி வீரனை ஏவினான். செபஸ்தியான் உடனே அவன் ஏவியவண்ணம் செய்தான். தான் சற்று முன் செய்த யோசனையால் அநேகமாய்த் தனக்கு ஜெயமுண்டாகுமென அவன் நம்பியிருந்தபோதிலும், அவனுக்கியல்பாகவேயுள்ள நன்னெறிப் பழக்கம் அவன் மனதைமாற்றிப் பழிவாங்குமெண்ணத்தை யகற்றியது. ஆல்டீமனை வேறு சந்தர்ப்பத்தில் காண நேரிடும் என்று நம்பினான். அப்போது யாவருமறிய அவனுடன் போர்செய்து தன் வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்வதே உத்தம வீரருக்குத் தக்கதென்று தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

ஆல்டீமன் மிக்க மன எரிச்சலுடன் அலியென்பவனையும் காவலாளர் தலைவனையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு சிறைச்சாலையைவிட்டகன்றான். அவன் போகையில், அன்று நேர்ந்த அசம்பாவிதமான காரியத்தால் தனக்கு என்னக் கெடுதி நேர இருக்கிறதோ என்னும் பயம் அவன் உள்ளத்தை வருத்தியது. அப்பய உணர்ச்சியை

தன் புத்தியினின்றுமகற்ற எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை.

தலைவன் கட்டளைப்படி யௌவன வீரன் தன் வேலையைக் கவனிக்கச் சென்றான். தன் நண்பர் அடைபட்டிருக்கும் காவலறை இதுவென்று தான் அன்று தெரிந்துகொள்ள நேர்ந்ததைப்பற்றி அவன் மனதிற்குள் ஒருவித திருப்தியுண்டாயிற்று. அதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தினான். அவன் தான் சாதாரணமாய் நின்று காவல் புரியும் இடம் சேர்ந்தும் சேராததற்குள், அந்த தாழ்வார முழுவதும் தொலையினின்று வரும் ஒருவித ஜோதிப்பிரகாசத்தால் நிரப்பப்பட்டதும், முன் பார்த்த முகமூடியணிந்த அந்த உருவமே மெதுவாய் தன் பக்கம் நடந்து வந்து, தன்னைக் கடந்துபோவதை ஆச்சரியத்துடன் கண்டான்.

அந்த உருவம் ஓசைபடாமல் மெதுவாக தாழ்வாரங்கள், படிக்கட்டுகள் முதலிய பல வழிகளின் வழியாய் நடந்து சென்றது. நமது வீரனோ, ஒருக்கால் அவ்வுருவம் மீண்டும் கார்சியாஸ் பிரபுவின் அறைக்குப் போனாலும் போகக்கூடும் என்று நினைத்து, இந்த மாயாரூபத்தால் தன் மனதில் தோன்றிய பேரச்சத்தையும் சட்டைபண்ணாமல், அதைப் பின்பற்றத் துணிந்தான். ஆனால் அப்போது தனக்குப்பதிலாய் வந்து தன்னைப் படுக்கைக்கனுப்பும் மாற்றாள் வருங் காலடிச்சத்தங் கேட்கவே, அன்று மாயாரூபத்தின் மர்மத்தை யாராய்வது அயுக்தமென்று அவ்விஷயத்தை அப்படியே விட்டுவிட்டு, தன்னிருப்பிடம் சென்றான். தன் போருடையைக் களைந்து கட்டிலிற் படுத்தான். அன்று தான் கண்ட சம்பவங்களைப்பற்றி அவன் நினைக்க நினைக்க, அவனுக்கு நித்திரை பிடிக்கவேயில்லை. இவ்வாறு அவன் நெடுநேரம் யோசனையிலாழ்ந்தவனாய்க் கோழி கூவும் சமயத்தில் கண்ணுறங்கினான்.

அதிகாரம்—4.

சிறையில் தோன்றிய காட்சி.

செபஸ்தியான் பிரபு நினைத்ததுபோலவே, அந்த மாயா உருவம், கார்சியாஸ் பிரபு இருந்த காவலறையை நோக்கி நடந்து, கதவைத் திறந்து, மெதுவாய் உள்ளே நுழைந்தது. உடனே அங்கிருந்த பிரபு தன்னைப் பிணித்திருந்த இரும்பு சங்கிலிகள் இடந்தருமளவு நிமிர்ந்து பார்த்தார்; எதிர்பார்த்திருந்த ஒரு சிநேகிதன் வந்தாற்போல், அவர் முகம் பிரகாசித்தது.

"நீ வருவாயென்று மூன்று தினங்களாய் எதிர்பார்த்திருந்தேன். இந்த நிர்ப்பாக்கிய கைதியை மறக்கமாட்டாயென்று எனக்குத் தெரியும்."

"நான் இவ்வளவு அருகிலிருக்கிறேன் என்று நீர் நினைத்திருக்கவேமாட்டீர். உம்முடைய கஷ்டங்களை பார்த்திருந்தும் உம்மேல் இரக்கங்கொள்ளாமல் யாரால் இருக்கமுடியும்? என்னால் கூடியவரையில் உமது கஷ்டங்களை நிவர்த்திசெய்ய வேண்டுமென்பதே என் விருப்பம். இதை எடுத்துண்ணும், அதனால் உமக்குக் கொஞ்சம் தெம்புண்டாகும்" என்று அன்பு நிறைந்த மெல்லிய குரலில் மொழிந்து அவ்வுருவம் தன்னுடைக்குள் மறைத்திருந்த ஒரு ரொட்டியையும் ஒரு கோப்பை நிறைய திராட்சரசத்தையும் அவரிடங் கொடுத்தது.

"தாகவிடாய்த் தீர்க்க தண்ணீர் தந்தவர்களையும் சன்மானிப்பதாகத் திருவாய்மலர்ந்தருளிய சர்வதயாபரக்கடவுள், நீ இன்றெனக்குச் செய்த பேருபகாரத்தை நினைத்தருள்வாராக! ஆ, இந்த சங்கிலிகள் முறிந்து நான் சுயேச்சையடைந்து என் முன்னோர்களின் கோட்டையில் இருப்பேனானல், நன்றி மறவாமை எத்தகையதென்று நீ மனமாரத் தெரிந்துகொள்வாய்!"

"நீர் எனக்கு என்ன சன்மானம் அளிப்பீர்? பொன்னும் வெள்ளியுமா? அல்லது பூமியும் மாளிகையுமா? இந்தப் பொருள்களை வைத்துக்கொண்டு என்ன செய்வதென எனக்குத் தெரியவில்லையென்று வைத்துக்கொள்வோம் என் ஆசைக்குமேலாக என்னிடம் இப்பொருள்கள் இருக்கின்றன என்றும் வைத்துக்கொள்வோம்."

"அதிசய உருவமே, நீ யார்? நீ எங்கிருந்து வருகிறாய்? நீ போவதும் வருவதும் எல்லாம் மர்மமாக இருக்கின்றதே! தேவதூதர்களைப்போல் நின்னைச் சுற்றிலும் ஒருவிதமான லோகப்பரிமளம் வீசுகிறதே! நீ மானிடஜன்மந்தானா, அல்லது பரலோகத்தினின்று வந்தவனா? சொல்லு. தேவதூதர்களுடைய குணதி

சயங்கள் நின்னிடம் சில விளங்குவதாக என் புத்தியிற் படுகின்றது."

"உம்மைப்போன்ற ஒரு மானிடஜன்மந் தான் நான். ஆனால் கஷ்டநிஷ்டூரங்களைக் கண்டும் உதவி செய்யாமலிருக்க என்னால் முடியவில்லை."

"நான் நின்னை மீண்டும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; தயவுசெய்து நீ யாரென்று எனக்குச் சொல்வாயாக. இந்த விஷயத்தில் நான் இன்னும் அறியாதவனாயிருக்க முடியவில்லை; என்மேல் இரங்கி, எனக்குதவி புரிந்து, என்மட்டில் ஒரு மகன் தன் தகப்பனுக்கு காட்டக்கூடிய அவ்வளவு அன்பையும் அநுதாபத்தையுங் காட்டிய நீ யாரென்று நான் அறியவேண்டியது அவசியமல்லவா?"

"நான் பின்னால் தெரிவிக்கிறேன்; ஏனெனில் நான் இப்போது என் பேரை வெளிவிடுவேனேயாகில், நீரும் நானும் துன்பத்துக்காளாவோம் என்பது திண்ணம்!"

"அப்படியானால் இந்த நிர்ப்பாக்கியனுக்கு உதவி செய்ய நீ யாரால் அனுப்பப்பட்டாயென்றாவது எனக்குத் தெரிவிக்கலாகாதா?"

"என்னை ஒருவரும் அனுப்பவில்லை; நான் யாருக்குங் கட்டுப்பட்டிருக்கவுமில்லை. இந்த நகரத்தில் ஒருவரைத் தவிர மற்றெவராலும் என் மேல் அதிகாரம் செலுத்தமுடியாது. கார்சியாஸ் பிரபுவே நான் சொல்வதைச் சாவதான்மாகக் கேளும். நீர் படுங் கஷ்டநிஷ்டூரங்களையும், மனத்திடனையும், பொறுமை சகிப்பையும் நானே நேரிற் பார்த்திருக்கிறேன். உமது மனைவி மக்களுக்காகவும், உம்மைச் சிறையில் அடைத்துக் குரூரமாய் நடத்தும் உமது பகைவர்களுக்காகவும் நீர் கடவுளைப்பார்த்துக் கேட்கும் விண்ணப்பங்களை நான் கேட்டிருக்கிறேன். இவ்வாறு உமது விஷயங்களை நேரிற் கண்டும் கேட்டிருந்தும், நான் உமதுபேரில் இரங்காமல் இருப்பதற்கு என் மனம் என்ன கல்லா, இரும்பா? ஆதலால்தான் நான் உமக்கு உதவி செய்யத் தீர்மானித்தது."

"என்னை இவ்விடத்தினின்றும் விடுவித்து' நீ மேற்கொண்டுள்ள புண்ணிய முயற்சியைப் பூர்த்திசெய்வாயாக!"

"அது என்னால் கூடிய காரியமாயிருந்தால், நான் முன்னமே உம்மை விடுவித்திருப்பேன். ஆனால் அந்தோ, அவ்விஷயம் என் வல்லமைக்குட்பட்டதல்ல. ஆனபோதிலும் தைரியத்தைக் கைவிடாதீர்; கடவுளைப் பார்த்து மன்றாடும்; உமது விடுதலை நாள் கிட்ட நெருங்கிவிட்டது."

இவ்வார்த்தைகளைச் சொன்னதும் அந்த மாயா உருவம் அந்த அறையைவிட்டகன்றது. இப்படியே அந்த உருவம் அக்காவற்கூடத்தில் அடைக்கப்பட்டுள்ள நிர்ப்பாக்கிய கிறீஸ்துவர்களையெல்லாம் பார்த்துவருவது வழக்கம். அவர்கள் ஒவ்வொருவரும் இவ்வுருவத்தை, தமக்குத் தேறுதல் சொல்ல தேவனால் அனுப்பப்பட்ட வானதூதன் என்றே நினைத்திருந்தார்கள். நம்பிக்கை யிழந்து வருந்துவோரை அன்பும் அநுதாபமும் நிறைந்த வார்த்தைகளால் தேற்றியும், பசித்தவர்களுக்கு உணவளித்துத் தாகமாயிருப்பவர்களுக்கு அருந்தத் தண்ணீர் உதவியும், வேதனைப்படுவோரின் காயங்களை சிகிச்சைசெய்தும், நோயாளிகளைக் குணப்படுத்தியும், ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் அநாதைகளான அக்கைதிகளுக்கு வேண்டிய எல்லாவித உதவியும் புரிந்துவந்தது அம்மாயா உருவம். ஆனால் அவ்வுருவம் யாரென்பதுமட்டும் பரம இரகசியமாகவேயிருந்தது. அவ்வுருவத்தின் மர்மத்தையறியக்கூடியவர் ஒருவருமில்லை; காவலாளர் அதைக்கண்டதும் ஒதுங்கி நின்று வழிவிட்டார்கள். சிறையின் இருப்புக்கதவுகளோ அவ்வுருவந் தோன்றினதும் திறக்கப்பட்டன.

மேலும் அவ்வுருவம் தான் சந்திக்கும் ஒவ்வொரு கிறீஸ்துவனையும் தான் வந்ததைப்பற்றி யாரிடமும் பேசக்கூடாதென எச்சரித்துச் சென்றது.

தான் தேடிவந்த நண்பனைக்கண்ட இரவு முதல், செபஸ்தியான் பிரபு, அவரை எவ்வாறு சந்தித்து—தன் விருப்பத்தைத் தெரிவித்து—விடுதலைசெய்வதென்னும் எண்ணத்தைத் தவிர வேறொன்றையும் சிந்தித்தவனல்ல. காவற்கூடத் தலைவனாகிய அலி என்பவன், அரசனுக்கு மிக்கப் பிரமாணிக்கமுள்ள ஊழியனானபடியால், தன் வேலையை வெகு ஜாக்கிரதையாகவும் கண்டிப்பாகவும் பார்த்துவந்தான். தன்னைப்போன்ற ஒரு வீரனிடம் தன் இரகசியத்தைச் சொல்வதோ அனர்த்தமாக முடியும். தன் ஏற்பாட்டில் தவறினாலோ, மரணமே தன் முடிவென்பது

திண்ணம். ஆதலால் இத்தகைய ஏற்பாட்டைப் பற்றிச் சிந்திப்பது கூடாத காரியம்.

இன்னது செய்வதென்று தோன்ருமல் நமதிளவல் மனவருத்தப்பட்டுக்கொண்டே நான்கு வாரங்களைக் கழித்தான். பின்னர் காவற்கூடத்தில் தான் காவல் காக்கும் முறைநாள் வந்தது. கொஞ்சம் நம்பிக்கைப் பிறந்தது. மாயா உருவம் தனக்கு உதவி செய்யாதா என்று நினைத்தான். அந்த மாயா உருவத்தைப் பின்பற்றிச் சென்று, கார்சியாஸ் பிரபுவை மீட்பதில் தனக்குதவி புரியும்படிக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானித்தான். அவன் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவ்வுருவம் அன்று தோன்றவில்லை.

நமது வீரனுடைய மனம் அப்போது பட்டபாடு என்னென்போம் ; தன் எண்ணமெல்லாம் வியர்த்தமாய்ப்போவதைக் காண அவன் மனந் துடித்தது. குறித்த இடத்தில் நின்று காவல் புரிய அவன் மனங் கொள்ளவில்லை. தன் உயிரைக்கொடுத்தாகிலும் மீட்கவேண்டுமென அவன் நினைத்த நண்பன் இருந்த அறையை நோக்கிப் போகவேண்டுமெனத் தன்னை யாரோ தூண்டுவதுபோல் அவன் அவ்வறையை நோக்கிச்சென்ருன். விளக்கு வெளிச்சத்தால் அறையின் கதவுகளையும் பூட்டையும் பரிசோதித்தான். அவைகள் பருமனுகவும் மிக்கப் பலமானவையாகவும் இருந்தன. தனக்குள் அதைப்போல் நூறு பங்கு பலனிருந்தபோதிலும் அக்கதவை யுடைப்பது முடியாத காரியம். ஆனல் வாசற்படியண்டை ஆகாரம் கொடுப்பதற்காக ஒரு சிறிய ஜன்னலிருந்தது. அதன் தாட்பாளை பேர்த்தெடுப்பது சுலபமென அவன் புத்தியிற் பட்டது. முன் ஜாக்கிரதையாகத் தன்னுடன் கொண்டுவந்திருந்த அரத்தின் உதவியால், ஒருவாலுங் கண்டு பிடிக்கமுடியாத அவ்வளவு ஜாக்கிரதையுடன் அந்த ஜன்னற் கதவின் தாட்பாளைப் பேர்த்துவிட்டான். அவன் இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ள கதவைத் திறந்துகொண்டு, "கார்சியாய் பிரபுவே! விழித்துக்கொள்ளும்! விழித்துக்கொண்டு நான் சொல்வதை யுற்றுக் கேளும்!" என்று கூப்பிட்டுச் சொன்னுன்.

"என்னைக் கூப்பிடுவது யார்? அக்குரலொலி எங்கிருந்து வருகிறது?" என்று இரண்டு கேள்விகள் மெல்லிய குரலில் உள்ளேயிருந்து வந்தன.

"உமது குமாரனுகிய செபஸ்தியான் நான் தான்!" என்று நமதிளவல் பதிலுரைத்தான்.

"தேவதாயே! நீயா?"

"நண்பரே, உம்மை மீட்கவே நான் இங்கே இருக்கிறேன். இந்த அரங்களையும் ஆயுதங்களையும் வாங்கிக்கொள்ளும். இந்த வாளை உமதிடுப்பிற் சொருகிக்கொள்ளும். இவ்வாயுதங்களின் உதவியால் உம்மைப் பிணித்திருக்கும் சங்கிலியை அறுத்தெறிந்து பூட்டையும் உடைத்துவிடும். இன்னும் இரண்டு வாரங்களில் நான் வருகிறேன். அப்போது உமது விடுதலை காலம் நெருங்கிவிட்டதென அறிவீர். என் தந்தாய், பயப்படவேண்டாம். தைரியத்தைக் கைவிடாமல் சர்வேசுரனை நம்பி, உரேக்காள் சீமாட்டியும் அவன் மக்களும் செய்வதுபோல் ஜெபித்துக்கொண்டிரும்."

நேரமாய்விட்டது, செபஸ்தியான் பிரபு, ஒருவராலும் தெரிந்துகொள்ளமுடியாத அவ்வளவு சாமர்த்தியமாய்க் கதவை மூடி வேறு தாளிட்டு, தன்னிடத்தை நாடி விரைந்துசென்ருன்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. செபஸ்தியான் மீண்டும் காவற்கூடம் வந்தான். அன்றிரவு வெகு இருட்டாயிருந்தது. காற்றும் புசலும் கடுமையாய் அடித்தது. அக்காவற்கூடத்தின் சுவர்களையும் மதில்களையும் தகர்த்து வீழ்த்திவிடும்போலிருந்தது. இடியிடித்து மின்னல் மின்ன, மழை வானந் திறந்ததுபோல் சரமாரியாய்ப் பொழிந்தது.

காற்று மழையும் தனக்கு உதவி புரிய வந்தனவென்று நமதிளவல் நினைத்துக்கொண்டே வேகமாய்ச்சென்று, கார்சியாஸ் பிரபுவின் அறை ஜன்னலைத் திறந்தான்.

"மகனே, நீ வந்துபோனதுமுதல் மணிகளை எண்ணிக்கொண்டேயிருந்தேன். என் சங்கிலிகளை யறுத்துவிட்டேன்; எனக்கு வேண்டியபோது, அவற்றைக் கழற்றி யெறியலாம். இரண்டு பூட்டுகளைத் திறக்கக்கூடும். இன்னும் இரண்டொரு தினங்களில் மூன்ருவது பூட்டையும் திறக்கக்கூடும் என்று நினைக்கிறேன்."

"உமது கரங்களுக்குப் பலத்தைக் கொடுத்த சர்வேசுரனுக்கு நன்றியறிந்திருப்போமாக! மூன்ருவது பூட்டைத் திறந்ததும், நீர் சுயேச்சை அடைந்ததாக நினைத்துக்கொள்ளும். காற்றிலும் கடுகிச் செல்லக்கூடிய குதிரையொன்று உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. ஸ்கலவோனிய போர்வீரனைப்போல் மாறுடை அணிந்து டொலிடோ நகரைவிட்டு வெளியேறி, இராச்சியத்தின் எல்லைகளைத் தாண்டிவிடலாம். தந்தாய், தயாராயிரும். இரண்டு வாரங்கள் கழித்து நான் வருவேன். அப்போது நாமிருவரும் இவ்விடத்தைவிட்டுப் பறந்தோடிவிடலாம். சர்வேசுரனுடைய சம்மனசுக்கள் நம்மை நடத்தி வழிக்காட்டுவார்கள். அஞ்சாதீர்!"

"ஆனல் நீ இனி இங்கே வரப்போகிறதில்லை! திருட்டுப்பயலே!" என்று ஒரு பெருங்குரலொலி கேட்டதும், நமது வீரனை ஒரு பலத்த கரம் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டது. செபஸ்தியான் வெகு கஷ்டத்துடன் பிடித்த பிடியினின்றுந் தன்னை விடுவித்துக்கொண்டு, எதிர்த்தவன் யாரெனப் பார்த்தான். ஹக்கீம் என்பவன் ஆறு காவற்காரருடன் அவன் முன் நின்றுன். உடனே நமது யௌவன வீரன் வாளை உருவிக்கொண்டு நின்றவர்களை யெதிர்த்தான். ஒரு நொடியில் ஹக்கீம் நிராயுதபாணியாய் தேகத்திற் படுகாயம்பட்டு கீழே விழுந்தான். காவற்காரரில் மூன்று பேர் காயமடைந்தனர். மீதி மூன்று பேரும் கோபாவேசத்துடன் செபஸ்தியான்மேல் பாய்ந்தனர். அச்சமயத்தில் திடீரென காவற்கூடத் தாழ்வாரத்தின் முன் நாம் பார்த்த மாயா உருவம் தோன்றி, வெண்மயமான ஒரு மேகத்தைப்போல அவர்கள் நின்ற விடத்தை நெருங்கிற்று. கார்சியாஸ் பிரபுவின் உயிரை நல்ல சமயத்தில் வந்து காப்பாற்றிய வெண் முக்காடிட்ட மாயா உருவம் இதுவேயென செபஸ்தியான் உடனே தெரிந்துகொண்டான். அவ்வுருவத்தைக் கண்டதும், துலுக்க வீரர்கள் பேயோ பூதமோ என்றஞ்சி நடுநடுங்கினவர்களாய் அந்த இடத்தைவிட்டு ஓட்டம்பிடித்தார்கள். நமதிளவல் அவ்வுருவத்தைக் கண்டஞ்சாமல், அதனுல் தனக்கு உதவி கிடைக்குமென நம்பி அதன் வரவை எதிர்நோக்கினவனுய் அங்கேயே அசையாமல் நின்றுன். அந்த மாயா உருவம் அவனை நெருங்கியதும், தன்னைப் பின்பற்றிவரும்படி செபஸ்தியானுக்குக் குறிப்பாலுணர்த்தி, நேரே சென்றது. நமது வீரனும் அதன் குறிப்புக்கிணங்கி, அவ்வுருவத்தைப் பின்பற்றி மூலை முடுக்கான சந்துகளிற் புகுந்து சென்றுன். அந்தமாய உருவத்தின் முன் சகல கதவுகளும் சுவர்களும் மாயமாய் திறந்துகொள்வதுபோலிருந்தது.

அப்படியே வெகு நேரம் நடந்து அவர்களிருவரும் கடைசியில் ஒரு சிறந்த விநோத மண்டபத்தில் நுழைந்தார்கள். அங்கே சில மாதர் உயர்ந்த மகமல்பட்டில் சரிகைப் பூவேலை செய்துகொண்டிருந்தார்கள். நமதிளவல் அவர்களைக் கடந்துபோகையில் அவர்களை வணங்கியவண்ணம் சென்றுன்; பின்னர் உயர்ந்த மதில் சுவர்களால் சூழப்பட்ட ஒரு சிங்காரத்தோட்டத்துக்குவந்து சேர்ந்தார்கள். முகமூடியணிந்த அவ்வுருவம் சுவரண்டை சென்று ஒரு சிறிய கதவைத் திறந்து, செபஸ்தியான் பக்கம் திரும்பி, அவசரத்தில் தன் பெண் குரலையும் மறைக்க மறந்து, "ஓடு, ஓடு, கணமுந் தாமதிக்காதே!" என்று மொழிந்தது.

செபஸ்தியான் பிரபு வெளியே வந்ததும் சுற்றுமுற்றும் பார்த்தான். தானிருப்பது நகரின் நடுப்பாகம் எனத் தெரிந்தது. தனக்கு நேர்ந்த விபத்தை நினைக்க நினைக்க, நடந்தது கனவுபோல் அவனுக்குத் தோன்ற, அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். ஓடும்படி முகமூடியணிந்த மாதரசி சொன்ன வார்த்தைகள் அவன் செவியில் தொனித்தமையால் தான் இருக்கும் ஆபத்தான நிலைமையை யுணர்ந்தான். அவன் தன் இருப்பிடத்துக்கு விரைந்துசென்று, குதிரை ஏறி அருகாமையிலுள்ள நகர்வாயிலை நாடித் தன் அசுவத்தை விட்டான். வாயில்காப்போர் தன்னைப் போலும் வீரர்களானமையால் ஒருவித சந்தேகமுங்கொள்ளாமல் அவனுக்கு வழிவிட்டார்கள். வாயிலைத் தாண்டி காற்றினுங் கடுக குதிரையை நடத்தி தேகஸ் நதியின் பாலத்தண்டை வருகையில், நமதிளவல் தன் கண்களை வானுக்கு உயர்த்தித் தன்னைப் பிராணபத்தினின்றுங் காப்பாற்றிய கருணையங்கடலாகிய தயாபரக் கடவுளுக்கு நன்றி செலுத்தினுன்.

(இன்னும் வரும்)

ச. செல்வன்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

ஊர்வனவற்ற தேசம்.—நியூ பவுன்ட்லான்ட் என்னும் தீவில், பாம்பு, பல்லி, தவளை ஓணான் முதலிய ஊர்வனவாகிய ஜெந்துக்கள் கிடையாதாம்.

அர்ச்சியசிஷ்டவர்கள்.—நமது சத்திய திருச்சபையிலே ஆதிமுதல் இதுவரையில் அர்ச்சியசிஷ்ட பட்டம் பெற்றவர்கள் 7,860 பேர் என ஒரு ஜெர்மன் மேதாவி கணக்கெடுத்திருக்கிறாராம்.

25 கோடி நிர்வாணிகள்.—உலகிலுள்ள மொத்த ஜனத்தொகையில் 75 கோடி பேர் பூரண உடை தரித்தவர்கள். 50 கோடி பேர் அரையுடை தரித்தவர்கள். 25 கோடி ஜனங்கள் உடையற்ற நிர்வாணிகளாயிருக்கிறார்களென சொல்லப்படுகின்றது.

விவாகம் செய்துகொள்ளக்கூடாது.—ஜெர்மனியில் குடியிருக்கப் போதுமான வீட்டு வசதியில்லாததால், அதனால் உண்டாகுங் கஷ்டங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் 24 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடாதென்று ஹாபக்நகர் அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களாம்.

மாஜி கெய்சரின் மனோரதம் இன்னும் மாறவில்லை.—இவரை ஒரு ஜெர்மன் சேனாவீரர் கண்டுபேசியபோது, தான் சுகக்ஷேமத்துடனிருப்பதாகவும், தனக்கு மறுபடியும் முன்போல உன்னத பதவியும் செல்வாக்கும் கிடைக்குமென்றும், கூடியசீக்கிரத்தில் வெகு கம்பீர குதூகலத்துடன் பெர்லின் பட்டணத்தில் பிரவேசிக்கலாகுமென்றும் சொன்னாராம். என்னே ஆகாயக் கோட்டையிது.

கப்பல் கட்டண குறைவு.—மேல் நாடுகளிலிருந்துவரும் சாமான்களுக்குக் கப்பல் கட்டணங்கள் தற்போது 100க்கு 50 வீதம் குறைக்கப்பட்டு விட்டனவென்றும், ஜெர்மனிமுதலிய சத்துரு தேசங்களினின்றும் சாமான்கள் தாராளமாய் வருகின்றனவென்றும் தெரிகிறது. ஆகலினால், அந்நியநாட்டுச் சாமான்களின் விலை ஒருவாறு சமீபத்தில் குறையுமென்று எதிர்பார்க்கலாம்போலும்.

இரத்தஞ்சிந்துஞ் சுரூபங்கள்.—அயர்லாந்தைச்சேர்ந்த கார்க் என்னு நகரில், மிஸ்டர் தோமாஸ் டுவான் என்பவர் வீட்டிலுள்ள பாடுபட்ட சுரூபம், அர்ச். தேவமாதா, சூசையப்பர், குழந்தை சேசுநாதர் சுரூபங்களினின்று இரத்தம் வடிவதாகவும், அதனால் அனேக வியாதியஸ்தர் குணமடைவதாகவும், அந்தப் புதுமையைப்பார்க்கத் திரளான ஜனங்கள் போவதாகவும், சொல்லப்படுகிறது.

அசையும் விக்கிரகம்.—பர்மாவைச் சேர்ந்த தாரவவ் என்னுமிடத்தில், கற்சிலையொன்று தானாய் அசைந்தாடுவதாகவும், அதை ஜனங்கன்ஆச்சரியமாய்ப்போய் பார்த்துவருவதாகவும் இரங்கூனிலிருந்து ஓர் வதந்தியுண்டாகிறது. அது மெய்யானால் மனிதனால் செய்யப்படும் எத்தனையோவித சூட்சம வித்தைகளில் இதுவும் ஒன்றென்று சொல்லப்படாதோ?

ஓர் அபூர்வ சிகிச்சை.—அமெரிக்காவைச்சேர்ந்த நியூயார்க் நகரத்தில், ஒரு டாக்டர் ஊமையனாகிய ஒருவன் மண்டையை மின்சார சக்தியால் துளைத்து அதனுள் மூளையின்மேல் ஒட்டிக்கொண்டிருந்த கிலிட் என்றும் ஒருவித வஸ்துவை வெளியேயெடுத்து போட்டுவிட்டு காயத்தை ஆற்றிய பிறகு, ஊமையன் தாராளமாகப் பேசப் புறப்பட்டானாம். என்னே ஆச்சரியம்!

பாடுகின்ற பாவை.—அமெரிக்காவைச் சேர்ந்த சான்பிரான்சிஸ்கோ நகரிலுள்ள டாக்டர் நிக்கோன் என்பவர் பஞ்சணையில் சாய்ந்திருக்கும் பாவனையில் பெண் உருவமொன்றை அமைத்து அது சித்தார் என்ற சங்கீதக் கருவியை வாசிக்கும்படி செய்திருக்கிறார். இந்த கானப்பாவையானது 64-பாட்டுகள் பாட பழகியிருக்கிறதாம். அந்தப் பாவையின் சரீரமெங்கும் சக்கரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். இதைச் செய்வதற்கு ஷெ டாக்டர் 12 வருடம்வேலை செய்திருக்கிறார்.

பாப்பானவரின் நன்கொடை.—தற்காலம் தன் செலவுக்குப் போதிய பணமின்றி தவித்துக்கொண்டிருக்கும், கண்டி குருமடத்திற்கு நமது அர்ச். பாப்பானவர் 50,000 லயர் அல்லது ரூ. 8,000 நன்கொடை அளித்திருக்கிறார். அவர் சென்ற வருஷத்தில்தான், அக்குருமடத்துக்குக் கோவில்

ஒன்று கட்டும் விஷயமாக 125,000 லயர் அல்லது ரூ. 20,000 கொடுத்தருளினர். இவையெல்லாம், அவர் இந்திய குருக்கள் ஈடேற்றத்தின்மட்டில் கொண்டிருக்கும் அன்பையும் அவாவையும் நன்றாய்த் தெரிவிக்கின்றனவன்றோ?

வக்காலத்துநாமாக்கள்.— திவான் பஹதூர், ராவ் பஹதூர், ராய்சாகேப் முதலிய கௌரதா பட்டங்கள் பெற்றுள்ளவர்கள் யாவரும் வக்காலத்துநாமா முதலிய தஸ்தாவேஜுகளில் அத்தாட்சிக் கையொப்பமிடலாமென்றும், அவ்வாறு அவர்களால் கையொப்பமிடப்பட்ட தஸ்தாவேஜுகள் ஜுடிஷியல் புரோசீடிங்ஸ் செய்யப்படும் கோர்ட்டு முதலிய எல்லா நியாயஸ்தலங்களிலும் செலாவணியாகுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது மெத்த சௌகரியமான ஏற்பாடு.

கனாட்டுக் கோமகன்.—நமது மாட்சிமைதங்கிய ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் சிறிய தந்தையாகிய மேன்மைதங்கிய கனாட் பிரபு அவர்களின் இந்திய விஜயத்தின் சம்பந்தமாய் பின்வரும் கால அட்டவணை குறிக்கப்பட்டிருக்கிறது.

ஊர்.	வருந் தேதி.	விடுந் தேதி.
சென்னை	... 10-1-21.	15-1-21.
நாகப்பூர்	... 18-1-21.	18-1-21.
மத்திய மாகாணம்	ஷை	27-1-21.
கல்கத்தா	... 28-1-21.	3-2-21.
ஆகிரா	... 5-2-21	7-2-21.
டெல்லி	... 7-2-21.	15-2-21.

சுருட்டுச் செலவு ரூ. 48,000.—ஸ்பா என்ற இடத்தில் ஜெர்மனி யுத்த சமாதானத்தைப்பற்றி யோசிக்கக்கூடிய நேச தேசப் பிரதிநிதிகள் ஏறக்குறைய ரூ. 48,000 பெறும்படியான புகையிலைச் சுருட்டு குடித்ததாக கணக்கு ஏற்பட்டிருக்கிறது. சுருட்டுச் செலவே இத்தனை ஆயிரமானபோது, தாகசாந்தி, சாப்பாடு, வாகனம், இருக்கை வசதி முதலியவைகளுக்கு எவ்வளவு பிடித்திருக்குமென்பதைப்பற்றி நாம் ஒருவாறு யூகித்துக்கொள்ளவேண்டுவதுதான்.

140 வயதுள்ள ஸ்திரி.—புருஷர்களை விட ஸ்திரிகளே அதிககாலம் ஜீவந்தர்களாக இருக்கிறார்களெனத் தெரியவருகிறது. இப்போது கல்கத்தாவைச்சேர்ந்த ஜேராபாகன் என்ற ஊரில், வசந்தகுமாரி என்னும் ஒரு பிராமண விதவை இருப்பதாயும், அவருக்கு 140 வயதாகிறதென்றும், கண்பார்வை நன்றாயிருக்கிறதென்றும், யாருடைய உதவியுமின்றி தாமாய் நடமாடுகிறாளென்றும், அவருக்கு மூன்றாவது தடவையாக பல்விழுந்து முளைக்கிறதென்றும் கல்கத்தா நிருபர் ஒருவர் அறிவிக்கிறார்.

"குழந்தைகளும் அவர்களின் ஆத்துமங்களும்".—என்ற தலைப்பிட்ட ஒரு சிறு புத்தகம் நம் பார்வைக்கு வந்தது. அதில் குழந்தைகளைச் சன்மார்க்கத்தில் நடத்தும் விஷயமாய் நல்ல புத்திமதிகள் வழிவகைகள் எளிய நடையில் கூறப்பட்டுள்ளன. "குழந்தைகளுக்கும் ஆத்துமமுண்டு", "இன்றைக்குக் குழந்தைகள் நாளைக்குப் பெரியோர்கள்". "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்", "தாயைப்போல சேய், நூலைப்போல சீலை" என்னும் முதுரைகளும் உண்மைகளும் பெற்றோருக்கு நன்கு புலப்படும்படி, அதன் ஆக்கியோனாகிய ஸ்ரீமாந் ஜி. வைத்தியநாத ஐயர் அவர்கள் நன்கு விளக்கியிருக்கிறார்கள். இப்புத்தகம், நம்மிந்திய தாய்மார் ஒவ்வொருவராலும் அவசியம் வாசிக்கப்படத் தக்கது.

சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு வைபவம்.—சென்றமீ 25-ம் உ சர்வகலாசாலை மண்டபத்தில் பற்பல பரீட்சைகளில் தேறினவர்களுக்குப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. இவ்வருஷம் பி. ஏ. பாஸ் பண்ணினவர்கள் 576 பேர்கள். இவர்களில் 25 பேர் மாதர்களாவர். 8 ஸ்திரீகள் உபாத்தியாயர் பரீட்சையாகிய எல். டி. பாஸ் பண்ணினார்கள். எம். பி. பி. எஸ். என்னும் டாக்டர் பரீட்சை கொடுத்தவர்களில் மூவர் ஸ்திரீகள். எம். எல். பாஸ் பண்ணினவர் 13 பேர். 311 பேர் பி. எல். என்னும் வக்கீல் பரீட்சை கொடுத்தவர்கள். பி. இ. என்னும் எஞ்ஜினீயர் பரிட்சை கொடுத்தவர்கள் 10 பேர். சுதேச பாஷா பண்டிதப் பட்டப் பரீட்சை கொடுத்தவர்கள் 21 பேர்களாவர்.

ஸ்திரிகளுக்குத் தனிப்பரீட்சை.—புருஷர்களுக்கு ஸ்கூல் பைனல்பரீட்சை யிருப்பதுபோல, ஸ்திரிகளுக்கும் அதற்குச் சமமான தனிப் பரீட்சையொன்று புதிதாய் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்கிலீஷ், தமிழ், கணிதம் ஆகிய மூன்றும்

கட்டாய பாடம். சங்கீதம், தாவர சாஸ்திரம், தையல், ஜரிகை வேலை, சுருக்கெழுத்து, பைதிகம் முதலியவைகளில் ஒன்று இஷ்டபாடம். பரீட்சையின் கட்டணம் ரூபா 12. கட்டிய ரசீதுடன் அப்ளிக்கேஷன் ஜனவரிமீ 20-ம் தேதிக்குள் அனுப்பப்படவேண்டும். வயது, பள்ளிக்கூட சர்டிபிக்கெட்டு, முதலிய நிபந்தனைகளேதுமில்லாமல், எந்த ஸ்திரியும் அப்பரீட்சைக்குப் போகலாம். ஆனால் இந்தப் பரீட்சையில் தேறினவர்கள் சர்வகலாசாலை படிப்புக்குப் போகமுடியாது.

'அகவிலை விசாரணைக் கமிட்டி.—இப்போதிருக்கிற அரிசி விலையையும், துணி விலையையும் குறைக்கிறதற்கு ஷை கமிட்டியார் சில வழிகளை தங்கள் யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரிசி விலையைக் குறைக்க, இந்நாட்டில் விளையும் அரிசியை அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படாது. பர்மா அரிசியை இறக்குமதி செய்யும் விஷயமாய் இப்போது அநுஷ்டித்துவரும் கட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டும் என்றும், துணி விலையைக் குறைக்க உள்ளூர் கைத்தரி நெசவுத்தொழிலை விருத்திசெய்யவேண்டும், அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளின்மேல் வரி விதிக்காமலிருக்கவேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறார்கள். கவர்ண்மெண்டார் இவ்விஷயமாய், என்ன செய்யப்போகிறார்களோ!

அடுத்த கவர்னர் ஜெனரல்.—கனந்தங்கிய செம்ஸ்போர்டு பிரபுவுக்குப்பின் இந்தியாவுக்கு இராஜப்பிரதிநிதியாக வரப்போகிறவர் இன்னாரென்பதன் விஷயமாய் பத்திரிகைகள் பல ஜோசியங்கள் சொல்லிவருகின்றன. முன்னர் சென்னைக் கவர்னராயிருந்து வங்காள கவர்னராகப் மாற்றப்பட்டு தம் மூருக்குப் திரும்பிப்போயிருக்கும் கனம் கார்மைக்கல் பிரபு வருவாரென்று இரண்டொரு பத்திரிகைகள் சொல்லுகின்றன. தற்போது நமது சென்னை கவர்னாயிருக்கும், கனம் வில்லிங்டன் பிரபு இராஜப்பிரதிநிதி யாவாரென்று வேறு சில பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் இவ்விஷயமாய் இதுவரையில் யாதொரு முடிவுஞ் செய்யப்படவில்லையென்று இந்திய மந்திரி சபையார் அறிவிக்கின்றனர்.

"கத்தோலிக்கு யௌவனர் சங்கம்."—தஞ்சாவூரில், அர்ச். வியாகுலமாதாக் கோவிலுக்கு தென்மேற்கில் உள்ள வீடு தியில், சென்றமாதம் 3-ம் தேதி, கத்தோலிக்கு யௌவனர் சங்கம் ஒன்று மிக ஆடம்பரமாய் ஸ்தாபிக்கப்பட்டதென்று கேள்வியுற்று சந்தோஷமானோம். தஞ்சையிலுள்ள கத்தோலிக்கு இளைஞர்களுக்குள் அதிக ஒற்றுமை உண்டாக்குவதும், அவர்களுடைய ஒழுக்கம் அறிவு, தேகபலம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதுமே அச்சங்கத்தின் நோக்கங்களாம். இதன் சம்பந்தமாய் ஒரு வாசகசாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சங். மெதர்லத் சுவாமிகள் அச்சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாயிருக்கிறார்கள் என்று தெரிகிறதால், அதனால் கோரிய நன்மை கிடைக்குமென்று எண்ண ஹேதுவுண்டு.

மதுரையில் குருமடம்.—1918-ஆ டிசம்பர்மீ 4-ம் தேதி மதுரையில் சேசுசபைக் குருமார்களால் அர்ச். சவேரியார் பேரால் ஆரம்பிக்கப்பட்ட குருமடமானது, நல்ல பலன் கொடுக்கும்போல் தோற்றுகிறது. அதில் தற்போது 24 சிறுவர்கள் வாசிக்கிறார்கள். 12 வயதுள்ள சிறுவர்கள் சேர்க்கப்பட்டு, 6 ஆ சாதாரண படிப்பு படித்தபின் குருத்துவ படிப்பு படிப்பிக்கப்படுகிறார்கள். மற்றப்படி பிள்ளைகளின் பெற்றோர்கள் படிப்புக்காவது சாப்பாடு, உடுப்பு முதலிய எந்த செலவுக்காவது ஒன்றும் கொடுக்கவேண்டுவதில்லை. குருத்துவ படிப்பு இவ்வாறு இலவசமாய் கிடைத்தபோதிலும், அதை அடைய பிள்ளைகள் தாராளமாய் வருவதாயில்லை. இதுபற்றியன்றோ இத்தகைய பள்ளிக்கூடங்கள் அதிகமாய் ஸ்தாபிக்கப்படுவதாயில்லை.

பால் குழை.—தண்ணீர், மண்ணெண்ணெய் முதலிய திரவப் பதார்த்தங்களை குழாய் எனப்படும் குழைகள்மூலமாய் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோய் உபயோகப்படுத்துவது சகஜம். ஆனால் இப்போது ஜெர்மனியில் கிராமாந்தரங்களிலிருந்து பட்டணங்களில் வேண்டிய இடத்திற்கு அமுதமாகிய பசும்பால் முதலிய பால்களை குழாய்கள்மூலமாகக் கொண்டுபோய் உபயோகப்படுத்துகிறார்களாம். ரெயில்வே மூலமாயும், ஆள்கள், வண்டிகள் மூலமாயும் கொண்டுபோகிறதில் உண்டாகிய செலவைவிட, இவ்வாறு குழைகள் மூலமாகக் கொண்டுபோகிறதின் செலவு அதிக

குறைவென்றும் காலதாமதமும் குறைவென்றும் இவ்வித சாதனம் எற்படுத்தப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆனல், முந்தின நாள் கொண்டுபோகப்பட்ட பால் குழைகளில் சிறிது அங்கங்கே தங்கியிருந்தால் அது அடுத்த நாளில் மோராகக் கெட்டுப்போயிருக்கையில் புதுப்பால் அவற்றின் மூலமாய் கொண்டுபோகப்பட்டால், அது முழுதுங் கெட்டுப்போகும் என்பது ஒரு கேள்வி. என்ருலும், இவ்வளவு யோசனை, கணக்கு செய்து இந்த எற்பாடு செய்தவர்கள், பால் கெட்டுப்போகாதபடிக்கு, குழைகளை அப்போதைக்கப்போது கழுவி சுத்தப்படுத்திவைக்க தக்க எத்தனங்கள் செய்திருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

அயர்லாந்தில் கலகம் அடங்கவில்லை.—தெருச்சண்டைகளும், கொலைகளும் நடந்துகொண்டேதானிருக்கின்றன. சமீபத்தில் கத்தோலிக்குக் குருவாகிய சங். மைக்கல் கிரிப்பின் சுவாமியாரை, அவர் நித்திரை செய்யும்போது, தூக்கிக்கொண்டுபோய் அநியாயமாய்க் கொன்று, தெருவில் போட்டுவிட்டு கொலைக்காரர் ஓடிவிட்டனர். இவர் கலகக்காரரான சின்பீனரானபோதிலும், அவர்களுடைய கொடுஞ் செயல்களைக் கண்டிக்கும் மிதவாதி. இந்தக் கலகம் ஆரம்பித்தது முதற்கொண்டு கொல்லப்பட்ட குருவானவர் இவர் ஒருவரேயாவர். கார்க் நகரில் பந்து விளையாட்டின்போது நடந்த சண்டையில் 10 பேர் கொல்லப்பட்டு, 65 பேர் காயமடைந்தனர். இராஜாங்கத்தார் கலகங்களை அடக்கும் விஷயமாய் கடுமையான முறைகளைக் கையாளவேண்டியவர்களாயிருக்கிருர்கள். இரவு 10 மணிக்குமேல் யாரும் வெளியே புறப்படக்கூடாதென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இளைஞர் புகைச்சுருட்டு பிடிப்பது.—சிறுவர்கள் சுருட்டுக்குடிப்பதைத் தடுக்க கொச்சி அரசாங்கத்தார் ஒரு சட்டம் எற்படுத்தியிருக்கிருர்கள். 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு புகையிலையையாவது அதனல் செய்யப்பட்ட சுருட்டையாவது மூக்குத்தூளையாவது எவன் ஒருவன் விற்கிருனே அப்படிப்பட்ட மனிதன், அவ்வித குற்றத்தை செய்தது முதல்தடவையாயிருந்தால் 20-ரூபாய்க்கு மேற்படாத அபராதத்திற்கும் இரண்டாவது தடவையாயிருந்தால் 50-ரூபாய்க்கு மேற்படாத அபராதத்திற்கும் மூன்ருவது அல்லது அதற்கு மேற்பட்ட தடவையாயிருந்தால் 100-ரூபாய்க்குக் குறையாத அபராதத்திற்கும் உள்ளாவான். புகையிலை, அல்லது புகையிலைச் சுருட்டு தூள் முதலியவையில் எதையாவது வைத்திருக்கும் யாதொரு சிறுவன் யாதொரு பாடசாலையில் வாசிக்கிறவனுயிருந்தால், அவனை அந்த பாடசாலை தலைமை உபாத்தியாயரிடம் ஒப்புவிக்கவேண்டும். யாதொரு பாடசாலையில் வாசிக்காத சிறுவனுயிருந்தால் அவனை சமீபத்திலுள்ள போலீசு ஸ்டேஷனுக்கு அனுப்பிவிடவேண்டும். அவனை மாஜிஸ்ரேட் விசாரணைசெய்து அது முதல்தடவையாயிருந்தால் அவனுக்குப் புத்திசொல்லி அனுப்பிவிடலாம், அல்லது ஒரு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம், அல்லது பிரம்பால் 6 அடி அடிக்கலாம். இப்பேர்ப்பட்ட சட்டமொன்று நமது பிரிடிஷ் இந்தியாவிலும் எற்படுத்தினுல் மெத்த நலமாகும்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

பொள்ளாச்சி.

எமதரிய கிறீஸ்துவ சகோதரர்களுக்கு மகா துக்கதுயரத்துடன் அறிவிப்பது என்னவெனில் எனது மனைவியும் டிசம்பர்மீ 19உ குருப்பட்டம் பெறும் சங். M. S. மாசிலாமணிநாதர் சுவாமியார் அவர்களுடைய கனிஷ்ட சகோதரியுமான ஞான தீபத்தம்மாள் 8 நாளாக சன்னிபாத ஜுரத்தினுல் Typhoid Fever வியாதியாய் இருந்து. எவ்வித சிகிச்சை செய்தும் குணப்படாமல் நாளதுஞு நவம்பர்மீ 6உ சனிக்கிழமை மாலை 2-35 மணிக்கு தனது பத்தாவையும் சிறுபாலகனை ஒரு குழந்தையையும் தனது அண்ணன், தகப்பன், அக்காள் மற்றுமுள்ள பந்துக்களையும் இப்பூவுலகில் விட்டுவிட்டு பரலோக பிராப்தியடைந்துவிட்டாள். இவளுடைய சடலம் அடுத்த ஞாயிற்றுக்கிழமையாகிய 7உ மாலை 2 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கோரும் நிர்ப்பாக்கியன்,

கே. அந்தோணிமுத்து கவுண்டர்.
22—11—20. வால்காட் பிரதர்ஸ்.

வடக்கன் குளம்.

நித்திய பிதாவே பாதாளத்தில் நின்று உம்மை நோக்கி யேழை தாசன் அண்ணார்ந்து கூப்பிடுகிறேன். என் விண்ணப்பத்தின் பேரொலியைக் கேட்டருளும். சுவாமீ இரக்கம்புரிகிறதும் பொறுத்தல் அளிக்கிறதும் உமது திருவுளத்தினியல்பாமே. ஆதலால் தேவரீரைப் பத்தியோடு அங்கிகரித்து சேசு மரி சூசையென்னும் திருநாமங்களைத் துதிக்கிறேன். என் தாயார் மத்தேசியம்மாள் 80 வயதில் வடக்கன் குளம் திருக்குடும்ப ஆலயப் பங்கு விசாரணையில் நவம்பர்மீ 2உ சகல உத்தரிக்கிற அத்துமாக்களின் திருநாள் அன்று மாலை 6 மணிக்குப் பரகதி சேர்ந்தாள். மறுநாள் 3உ மாலை 3 மணிக்கு அவளுடைய சடலத்தை நல்லடக்கம் செய்தார்கள். நம்முடைய நல்ல ஆயன் சந்தாதார்கள் அவள் ஆத்துமத்துக்காக 1-பர., 1-பிரி. வேண்டிக்கொள்ளும்படி மன்றாடும் தாயை யிழந்த சேயன்.

10—11—20. A. K. மரிய மிக்கேல் நாடார்.

தூன்னூர்.

ஐயா, எனது அருமைப் புதல்வியும் பொள்ளாச்சி (Messers Patel Brothers) பட்டேல் பிரதர்ஸ் கம்பனியாரின் ஸப் ஏஜண்டு ஸ்ரீமான் C. R. அந்தோணிமுத்துக் கவுண்டரின் பெருமை பொருந்திய மனையாளுமாகிய சௌபாக்கியவதி, ஆரோக்கியம்மாள் என்னும் பெண்மணி சில காலம் காயலாக இருந்து எவ்வித சிகிச்சையாலும் குணப்படாமல், தனது ஏக புத்திரனாகிய சுந்தரராஜு என்னும் 9 மாதத்திய சிறு மகனையும், பெற்றோரையும், கணவனையும், மாமனார், மாமியாரையும், பெற்றோரையும், பரிதவிக்க விட்டு நாளது 1920ஞு நவம்பர்மீ 9உ செவ்வாய்க்கிழமையன்று மாலை 3 மணிக்கு தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்று தனது 17ம் வயதில் பரலோகபிராப்தியடைந்தனள். மறுநாட்காலை 8½ மணிக்கு சொந்தபந்துக்களாலும், ஆப்தர்களாலும் மிகுந்த வியாகுலத்துடனும் சவச்சேம சடங்குகளுடனும், கோயமுத்தூர் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டனள். இதைக் கண்ணுற்ற நண்பர்களை அவள் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கோரும் நிர்ப்பாக்கியன்,

S. சூசை கவுண்டர்,
அர்ச். அந்தோணியார் செக்கண்டரி
9—11—20. பாடசாலை, உபாத்தியாயர்.

MARIAN CONGRESS SOUVENIR CARDS.

மரியாயின் மகா சங்கத்துக்கு யாத்திரை செய்கிறவர்கள் தங்கள் யாத்திரையின் ஞாபகார்த்தமாய் தங்கள் சிநேகிதர் அல்லது உறவினர்களுக்கு வெகுமதிபண்ணுவதற்காய் பல அரிய அர்ச், தேவமாதாவின் சாயலுள்ள போஸ்ட் கார்ட் பெருந் தொகையாய் தருவித்திருக்கிறேன். கார்ட்ஸ் பார்ப்பதற்கு வெகு நேர்த்தியாயும் மனதிற்கு சந்தோஷமாயும் இருக்கும். ஒவ்வொரு கார்ட்ஸுக்கும் கவர் ஒன்று கொடுக்கப்படும். அதில் "மரியாயின் சங்க ஞாபகம்" என்று போடப்பட்டிருக்கும் இலங்கை திருயாத்திரை ஸ்தலங்களிலிருந்து கார்ட்ஸ் அனுப்புவது சர்வசாதாரணமானபடியால் இதைப்பற்றி அதிகமாய் சொல்லவில்லை. முன்னடியே தருவித்துக்கொள்ளுங்கள்.

எலக்டிரிக் கார்ட்ஸ் 6க்கு	விலை ரூ	1	0	0	பலமாதிரியான கார்ட்ஸ் 6க்கு அணா	0	10	0
சில்வர் அன் கோல்டு 6க்கு	,, அணா	0	12	0	கருப்பு கார்ட்ஸ் 12க்கு விலை ,,	0	14	0
சாதாரண கார்ட்ஸ் 6க்கு	,, ,,	0	8	0				

இன்னும் எங்களிடம் கத்தோலிக்கருக்கு தேவையான சகல சாமான்களும் சரசமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

XMAS & NEW YEAR CARDS.

உங்கள் சிநேகிதரை சந்தோஷப்படுத்தவேண்டுமா?

அப்படியானால் எங்களால் புதிதாய் மேல் தேசத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கிற அதிவிநோத விசித்திரம்பொருந்திய போஸ்டு கார்ட்ஸ் அழகுள்ள ஆண்டவர் பிறந்த பாவனையான கார்டும் பல அர்ச்சியசிஷ்டவர்களின் சாயலுள்ளதுமானவை. பார்ப்பவர் கண்களைக் கவரக்கூடிய விதமாய் வெள்ளியினால் வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. டசன் விலை ரூ 1—அணா 8. கொத்து வேலைப்பாடு அமைந்ததும் பல அர்ச்சியசிஷ்டவர்களின் சாயலுமான கார்டுகளின் விலை டசன் ரூ. 1—அணா 4. போட்டோ நிறக் கார்ட்ஸ், இவை ஒவ்வொரு கார்டும் வெகு நேர்த்தியாயும் தத்ரூபமாயும் இருக்கின்றன. விலை டசன் ரூ. 1. ஜெபபுஸ்தகத்தில் வைக்கக்கூடிய பலவர்ணப் படங்கள் ஆண்டவர் பிறந்த பாவனையாயும், பல அர்ச்சியசிஷ்டவர்கள் சாயலுள்ளதுமானவை 100க்கு ரூ. 2. இன்னும் எங்களிடம் பல விலையுள்ள கார்டுகள் ஏராளமாய் இருக்கின்றன. (தபால் செலவு பிரத்தியேகம்.)

O. X. FERNANDO,
St. Mary's Emporium,
Negombo, *Ceylon*.

ஓ. எக்ஸ். பேர்னண்டோ,
செண். மேரீஸ் எம்போரியம்,
நீர்கொழும்பு, சிலோன்.

சென்னையில் கத்தோலிக்கு திருச்சபைக்கு ஓர் ஆபரணம்.

162033



பதுவாப்பதியரான அர்ச். அந்தோனியாருக்குத் தக்கதோர் ஞாபகார்த்த நிலையம்.

பிரிய வாசகரே !

புதுப்பேட்டையிலிருந்த பழய அந்தோனியார் கோவில் இடித்துவிடப்பட்டு ஒரு அழகிய நேர்த்தியான புதுக்கோவில் கட்டப்பட்டுவருகிறது. அக்கோவிலைக் கட்டி முடிக்க எமக்கு எறக்குறைய ரூபாய் 60,000 தேவை. உங்கள் உதவிப்பொருளைத் தயைசெய்து எமக்கு அனுப்பும்படிக் கோருகிறோம். உங்கள் பிரிய அர்ச்சியசிஷ்டவருக்கு நீங்கள் அநேக வந்தனக் காணிக்கைகள் செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறீர்களன்றோ ? அவைகளைக் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள். இக்கோவில் உங்களுக்கு அவர்மீதுள்ள நேசம், பக்தி இவற்றிற்கு ஓர் நெடுங்கால அத்தாட்சியாக விளங்கும். நீங்கள் எமது வேண்டுகோளை மறவாமல் இருப்பதன்றியும், உங்கள் பந்துக்களுக்கும், நேசர்களுக்கும் இதைப்பற்றி அறிவிப்பீர்கள் என்றும் நம்புகிறோம். அர்ச். அந்தோனியார் உங்களுக்கு வேண்டியவைகளையெல்லாங் கொடுத்து உங்களைத் தமது பாதுகாவலில் வைத்துக்கொள்வாரென்பதை மறவாதீர்களாக.

இப்படிக்கு,

Rev. Y. ARULAPPA,
St. Antony's Church, Pudupet, Madras.

அதிர்ஷ்ட விளம்பரம்.

THE GRAND VARIETY RAFFLE IN AID OF ST. ANN'S ORPHANAGE (*Boys'*) ST. ANTHONY'S ORPHANAGE (*Girls'*) AND RELIEF OF THE POOR.

டிக்கட் விலை நாலு அணாமாத்திரம்.

250 பிரைஸ்கள்.

புக் ஒன்று ரூபாய் 5—0—0.

1-வது.—பிரைஸ் ரூபாய்		**4,000**	6-வது.—பிரைஸ் ரூபாய்		**300**
2-வது.—	,, ,,	**1,500**	7-வது.—	,, ,,	**250**
3-வது.—	,, ,,	**1,000**	8-வது.—	,, ,,	**200**
4-வது.—	,, ,,	**500**	9-வது.—	,, ,,	**150**
5-வது.—	,, ,,	**400**	10-வது.—	,, ,,	**100**

மற்றும் 240 பிரைஸ்கள் ரூ 50 முதல் 5 வரையிலுமுண்டு. இது 1921ஞு மார்ச்மீ 6௳ நடைபெறும். நாலு அணா பெரிய காரியமல்ல. தங்கள் அதிர்ஷ்டம் எப்படியோ உடனே பணமனுப்பி தருவித்துக்கொள்ளவும். டிக்கட் வேண்டியவர்கள் கீழ்கண்டவரிடம் பெற்றுக்கொள்ளவும். 10 டிக்கட்டுக்கு 1 டிக்கட் இனம்.

M. M. THOMAS PILLAY,
Hosur Remount Depot P.O., *Salem Dt.*

M. M. தோமாஸ் பிள்ளை,
ஒசூர் ரிமவுண்ட் டிபோ P.O., சேலம் *Dt.*

SL ... No3-18